விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 22 செவ்வாய்க்கிழமை (06.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 199

MADRAS CEMENTS LTD

ராம்கோ

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை ஓகஸ்ட் மாதம் முதல் இரத்து

## ஐரோ. ஒன்றியம் அறிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்காக இலங்கைக்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி முதல் தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளது.

இது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்தத் தகவலை அது வெளியிட்டுள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை முதல்...**

செம்மொழி மாநாடு ஆய்வுக் கட்டுரைகள் நாளை முதல் உங்கள் **வலம்புரியில்** தொடர்ந்து வெளிவரும்.

## ரணில் விக்கிரமசிங்கவுக்கு மரண அச்சுறுத்தல்

(கொழும்பு)

தமக்கு மரண அச்சுறுத்தல் நிலவுவதாக எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பிலான விவாதம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தம் மீது அண்மையில் தண்ணீர்ப் போத்தல் வீசி எறியப்பட்டதாகவும் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தம்மைக் கொலை செய்யப் போவதாக அச்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்தின் தாளங்களுக்கு எம்மால் ஆட்டம் போட முடியாது

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியன உட்பட சர்வதேச சமூகத்தின் தாளத்திற்கு இலங்கை ஒருபோதும் ஆடாது என்று அரசின் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டின் நன்மைகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எந்தத் தீர்மானத்தையும் அரசு ஒருபோதும் எடுக்காது. நாட்டின் நன்மையை உத்தேசித்தே

(20 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி, மன்னம்பிட்டிய மணல் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும்

### அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்குத் தேவையான மணல் விநியோகத்தைத் துரிதப்படுத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது கட்டடப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதனால் அதற்குத் தேவைப்படும் மணலை துரிதமாக வழங்குவதற்கு வசதியாக பூநகரி மற்றும் மன்னம்பிட்டிய ஆகிய இடங்களில் இருந்து மணலை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்

(20 ஆம் பக்கம் பார்க்க)

## மறு அறிவித்தல் வரும் வரை அரச அதிபராகக் கணேஷ்

(யாழ்ப்பாணம்).

மறு அறிவித்தல் வரும் வரை யாழ். மாவட்ட அரச அதிபராக க.கணேஷ் கடமையாற்றுவார் எனப் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதியுடன் யாழ்.அரச அதிபராக இருந்த க.கணேஷ் ஓய்வு பெற்று, முதலாம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு அரச அதிபராகக் கடமையாற்றும் திருமதி இமெல்டா சுகுமார் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றுவார் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்திருந்தது.

அதன் பின்னர் இமெல்டா சுகுமாரின் இடமாற்றம் நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(சி)

## சர்வதேச யுத்த விதிகளுக்கு அமையவே புலிகளுக்கு எதிரான யுத்தம் நடைபெற்றது

### நிபுணர் குழுவுக்கு அஞ்சப் போவதில்லை என்கிறார் சரத்

(கொழும்பு)

சர்வதேச யுத்த விதிகளுக்கு அமைவான முறையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் முன்னெடுக்கப்பட்டதாக முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இராணுவப் படையினரைக் குற்றச் செயல்களிலிருந்து விடுவிக்கத் தாம் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவுக்குத் தாம் அஞ்சப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தை வென்றெடுக்கும் தருணத்தில் இராணுவத் தளபதியாகச் செயலாற்றியவன் என்ற அடிப்படையில் பொறுப்புடன் தாம் இதனைக் குறிப்பிடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கு எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள ஆஜராகத் தயார். இவ்வாறான நிபுணர்கள் குழுவினைக் கண்டு இலங்கை அச்சமடைய வேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## ஒன்றிய உப குழுக் கூட்டம் தமிழர் பிரச்சினை குறித்து ஆய்வு

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் ஒன்றியத்தின் உப குழுக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தின் போது இந்த ஒன்றியத்தின் நோக்கம், குறிக்கோள், வேல்லத் திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதாகத் தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் எம்.சிவாஜிலிங்கம் தமிழ் சி.என்.என். இணையத்தளத்திற்குத் தெரிவித்தார்.

குறிக்கோள் என்ற விடயத்தில் தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதற்கான தீர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என ஆராயப்பட்டது.

நேற்று ஆராயப்பட்ட அனைத்து விடயங்களும் எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ள தமிழ்க் கட்சிகளின் ஒன்றியத்தின் பிரதான கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ச-5)

## நைரோபி மாநாட்டில் கலந்து கொள்ள பொன்சேகாவை அனுமதிக்க வேண்டும்

### ஜ.தே. முன்னணி வேண்டுகோள்

(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜெனரல் சரத் பொன்சேகா பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்க மறுத்தால் இது தொடர்பாக பொதுநலவாய அமைப்பிடம் ஆட்சேபம் தெரிவிக்கப்படும் என ஜனநாயகத் தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

கென்யா தலைநகர் நைரோபியில் எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் இம் மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள அனை

(20 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





சென். ஜோன்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவுஸ்திரேலிய ஜேம்ஸ்குக் பல்கலைக்கழகப் பேராசிரியர் நற்குணம் கேதீஸன் உரையாற்றுவதையும் திருமதி பிரசானி கேதீஸன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் பட (படங்கள் :- சுரேஷ்)

# அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, அப்பிரேரணைக்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 32 வாக்குகளும் கிடைத்தன. ஐ.தே.க., த.தே.கூ., ஜ.தே.மு. என்பன எதிராக வாக்களித்தன. (ச–5)

**Personal Classes**

O/L, A/L English and English Grammer Classes, Piano, Guitar (western music) Classes.

828,Hospital Road,
Jaffna.
(1809) T.P : 0775433140

**காணி விற்பனைக்கு**

அரியாலை அரசடி வீதியில் வீட்டுத் திட்டத்திற்கு உகந்த 2 பரப்பு குருமணல் காணி விற்பனைக் குண்டு. குருமணலை காணியுடன் கொள்வனவு செய்ய விரும்புபவர்களும் நேரில் தொடர்பு கொள்ளலாம்.

இந்திராணி (றொசாறியன் ஆயுர்வேத
கோமியோபதி வைத்தியர்)
28/1, எ.வி றோட்,
கொழும்புத்துறை. (1810)

# மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

வடக்கில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு தேவையான ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் துரித கதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மீள் குடியேற்றப்பட்ட 12 ஆயிரம் பேருக்கு தேசிய அடையாள அட்டைகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு மற்றும்பொதுநிர்வாகஅமைச்சுஆகியனஇணைந்து இந்த ஆவணங்களை விநியோகம் செய்யும் நடவடிக்கைககளைமேற்கொண்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட ஆவணங்களை வழங்கும்பணி பூர்த்தியாகியுள்ளதெனவும் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விரைவில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச–5)

# வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2010 (I) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2010 ஒக்ரோபர் மாதம் நடத்தப்படவுள்ளது.

அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இன் நியமனமொன்றை பெற்றுள்ள அலவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பெறுவர்.

விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்ப படிவத்தினைத் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2010 ஒகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்த பத்திரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (ச–3)

# போட்டிப் பரீட்சைக்கான அரசாங்கத்தின் மீள் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க சேவையின் கனிஷ்ட ஊழியர்களை அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இற்கு தரம் உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை–2009 பரீட்சை அறிவித்தலில் விண்ணப்பதாரி 2010.08.02ஆம் திகதிக்கு உடன் முன்னராக நிரந்தரப் பதவியொன்றில் குறைந்த பட்சம் 5 வருடகாலப் பகுதி தொடர்ச்சியாகவும், முனைப்பாகவும், திருப்திகரமாகவும் சேவையாற்றியுள்ளவராக இருக்க வேண்டுமென்பதுடன் அதனைப்பற்றி திணைக்களத் தலைவர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 2010.08.02ஆம் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து ஆண்டுகளில் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன்,

ஒழுக்காற்றுத்தண்டனை எதற்கும் ஆளாகாது இருத்தல் வேண்டும். மேலும் அப்பரீட்சை அறிவிப்பில் 9–(III) பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியானது 2010.08.02 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவிப்பு 2010 மே மாதம் 14ஆம் திகதி 1654ஆம் இல்க்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை அறிவிப்பும் அதனுடன் திருத்தம் செய்து 2010 யூன் மாதம் 4ஆம் திகதி 1657ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தம் செய்த அறிவிப்புடனும் தொடர்புடையதாகும். (ச–3)

# யாழ். மாணவருக்கான சீமாவின் விசேட சலுகை

(யாழ்ப்பாணம்)

சீமா கற்கைநெறிக்கானபதிவுக்கட்டணத்தை சீமா நிறுவனம் யாழ். மாணவர்களுக்காக 150 பிரித்தானிய பவுண்ஸிலிருந்து 60 பிரித்தானிய புவுண்ஸாக குறைந்துள்ளது. இச் சலுகைக்கான விண்ணப்ப முடிபுத்திகதி இம் மாதம் 10ஆம் திகதி மட்டுமே.

16 வயதிற்கு மேற்பட்ட எத்துறைசார்ந்தோரும் விண்ணப்பிக்க முடியும். சீமா கற்கை நெறிக்கு O/L, A/L தகைமை கட்டாயமானதல்ல. மாணவர் நலன் கருதி மேலதிக ஆங்கில டிப்ளோமா வகுப்புக்களும் சர்வதேச கணினி அனுமதிப்பத்திர வகுப்புக்களும் இலவசமாக நடத்தப்படுகின்றன.

வங்கி நிறுவனங்களில் பணிபுரிவோர், வெளிநாடு செல்லவிரும்புவோர் அனைவருக்கும் பயனுள்ள இக்கற்கை நெறியின் அனைத்துப்பிரிவுகளும் பரீட்சைகளும் யாழ். எம்.சி.எஸ். நிறுவனத்தில் நடைபெறுகின்றது.

இச்சலுகையை பயன்படுத்தி புதிதாக இக் கற்கை நெறியில் இணைய விரும்புவோரும் பாடவிலக்குக்கு விண்ணப்பிப்போரும் இல. 324 பலாலி வீதி பல்கலைக்கழக சந்தியில் உள்ள எம்.சி.எஸ். நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும். (ச–5)

# ஏ.எல். மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் றோட்டறக் கழகத்தினால் நடத்தப்படும் க.பொ.த உயர்தர உயிரியல் கணிதப்பிரிவு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு நாளை புதன்கிழமை தொடக்கம் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நாளையும் நாளை மறுதினமும் இரசாயனவியல், உயிரியல், இணைந்த கணிதப் பாடங்களுக்கான கருத்தரங்கும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் 12.30 மணியிலிருந்து 3.30 மணி வரையும் பௌதிகவியல் பாடத்துக்கான கருத்தரங்கும் இடம்பெறும். (ச–3)

# மனிதஉரிமைச் செயற்பாட்டாளர் சட்டத்தரணி டெஸ்ட்மண்ட் காலமானார்

(கொழும்பு)



சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான டெஸ்மண்ட் பெர்னாண்டோ கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் நேற்று காலமானார்.

ஜனாதிபதி சட்டத்தரணியான டெஸ்மண்ட் பெர்னாண்டோ 1974ஆம் ஆண்டில் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் முதலாவது செயலாளராக தெரிவானார்.

இரு தடவைகள் இச்சங்கத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட டெஸ்ட்மண்ட் பெர் னாண்டோ சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் (ஐ.பி.ஏ) தலைவராக பதவி வகித்த ஒரேஒரு இலங்கையரும் இரண்டாவது ஆசியரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

# தமிழ்ச்செல்வனின் சொத்துக்கள் தொடர்பில் கனடாவில் புதிய சர்ச்சை?

(கொழும்பு)

## திவயினவில் தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் சொத்துக்கள் தொடர்பில் சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது. கனடாவின் ஸ்க்ராபோவில் காணப்படும் எஸ்.பி. என்ற பல்பொருள் அங்காடியின் உரிமை தொடர்பில் சர்ச்சை நிலை ஏற்பட்டுள்ளது.

மறைந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனின் சகோதரிக்கும் குறித்த பல்பொருள் அங்காடியின் தற்போதைய உரிமையாளர் கிருபாகரனுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 15 வருடங்களாக குறித்த பல்பொருள் அங்காடியை தாம் நிர்வகித்து வருவதாகவும் இதன் உரிமையை எவருக்கும் கொடுக்கப் போவதில்லை எனவும் கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கனேடிய புலி வலையமைப்பிடம் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் எவ்விதமானநடவடிக்கையும்எடுக்கப்படவில்லை என திவயின குறிப்பிட்டுள்ளது. (ச–5)

# இன்று ஒரு தகவல்

## மனித இயல்புகள்

இந்த உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் ஒரு தனித்துவமான குணம் உண்டு.

ஒரு நாய் இருக்கிறது. அதனுடைய குணம் என்னவென்று நமக்குத் தெரியும். ஒரு கழுதை இருக்கிறது. அதனுடைய குணம் எப்படி என்று நமக்குத் தெரியாதா?

ஒரு குரங்கு இருக்கிறது. அது என்ன செய்யும் என்று நமக்குத் தெரியும். ஆனால் ஒரு மனிதனின் குணம் என்னவென்பதை நாம் சரியாகச் சொல்லிவிடமுடியாது.

எந்த நேரத்தில் எந்தக் குணத்தில் இருப்பான் என்று கண்டுபிடிப்பது கஷ்டம். பேச்சுக் கொடுத்துப் பார்த்தால் தான் தெரியும்.

அது சரி ,மனிதன் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்?ஒரு புராணக் கதையைக் கேட்டீர்களானால் அதற்குப் பின் இப்படியான கேள்விகளெல்லாம் கேட்கமாட்டீர்கள்.

ஆண்டவன் சகல ஜீவராசிகளையும் படைத்த பின் அவற்றுக்கு ஆயுள் காலம் என்னவென்பதை முடிவு செய்ய வேண்டியிருந்தது. அவர் பார்த்தார். " சகல ஜீவராசிகளையும் சமமாகத் தான் உண்டாக்கியிருக்கிறோம். இதில் ஒவ்வொன்றுக்கும் வயது வித்தியாசம் எதற்கு? எல்லாம் ஒரேமாதிரியாக இருந்து விட்டுப் போகட்டும்" என்று நினைத்தார். அதனால் எல்லாவற்றுக்கும் சராசரியாக 30 வருட ஆயுள் காலம் என்று முடிவு செய்தார்.

இதைக் கேள்விப்பட்டவுடன் நான்கு விதமான ஜீவராசிகளுக்கு மட்டும் இதில் திருப்தி ஏற்படவில்லை.

கழுதை, நாய், குரங்கு, மனிதன் இவை நான்கிற்கும் தான்.

உடனே பகவானிடம் முறையிடத் தீர்மானித்தனர். நாரதரையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார்கள்.

கடவுளிடம் போய் நின்றார்கள். முதலில் கழுதை முன்னால் வந்து நின்றது. "கடவுளே! நானோ காலம் பூராவும் பொதி சுமந்து காலம் தள்ளப் போகிறேன். மிகவும் கஷ்டப்பட்டுப் பொதி சுமக்கும் எனக்கு 30 வருட ஆயுள் என்பது மிக அதிகம். கொஞ்சம் குறைத்து விட்டால் பரவாயில்லை" என்றது.

பகவான் பார்த்தார். அது சொல்வதும் நியாயமாகப்பட்டது. ஆதலால் அதனுடைய ஆயுளை 18 வருடமாக குறைத்து விட்டார்.

அடுத்ததாக நாய் வந்து நின்றது.

"சுவாமி, என்னுடைய பிழைப்பே நாய்ப்பிழைப்பு... எனக்கு எதற்கு 30 வருடம். அவ்வளவு நாட்கள் நான் கஷ்டப்பட வேண்டுமா? "என்றது. அதுவும் சரிதான்" என்று நினைத்தார் கடவுள்.

"சரி"என்று அதனுடைய ஆயுளை 12 வருடமாகக் குறைத்து விட்டார்.

நாய் சந்தோஷமாக வாலை ஆட்டிக் கொண்டே அங்கிருந்து நகர்ந்து போய் விட்டது.

அடுத்ததாக குரங்கு வந்து நின்றது. சாமி! என்னுடைய சேட்டைகள் எப்படி என்பது உங்களுக்கே நன்றாகப் புரியும்.

எப்பொழுது பார்த்தாலும் மரத்திலும் கிளையிலும் தொங்கிக் கொண்டிருக்கப் போகிறேன். எனக்கு எதற்கு 30 வருடம்?"என்றது.

கடவுள் பார்த்தார். சரி என்று அதையும் 10 வருடமாகக் குறைத்து விட்டார். குரங்குக்கு ரொம்ப சந்தோஷம். கடைசியாக மனிதன் போய் நின்றான்.

"ஈஸ்வரா எனக்கு 30 வருடம் பத்தாது. நான் இந்த உலகத்தில் நிறையச் சாப்பிட வேண்டியிருக்கு. தூங்க வேண்டியிருக்கு. நிறைய அனுபவிக்க வேண்டியிருக்கு. அதனால் என்னுடைய ஆயுளை கொஞ்சம் அதிகப்படுத்தினால் பரவாயில்லை"என்றான்.

கடவுள் யோசித்தார். ஆயுளை அதிகப்படுத்தினால் அதில் சில பிரச்சினைகள் இருக்கிறதே... பூமியில் இடப்பிரச்சினைகளெல்லாம் வருமே.... என்று கொஞ்சம் தயங்கினார். அதைப் பார்த்தவுடன் மனிதன் அதற்கு ஒரு வழியையும் கூறினான்.

"எதற்காக யோசிக்கிறீங்க? கழுதையில் குறைத்த 12 வருடம், நாயில் குறைத்த 18 வருடம், குரங்கில் குறைத்த 20 வருடம் இவையெல்லாவற்றையும் சேர்த்து எனக்குக் கொடுத்து விட்டீர்களானால் போதும்... உங்களுக்கும் கணக்கு பிழைக்காது" என்றான்.

"சரி... அப்படியே ஆகட்டும்"என்றார் கடவுள். அதனுடைய பலன் இப்பொழுது தான் புரிகிறது.

ஏற்கனவே அப்படி முடிவாகியதால் தான் இப்பொழுது மனிதன் 30 வயதுவரை சந்தோஷமாக இருக்கிறான். இது அவனுக்கென்று விதிக்கப்பட்ட ஆயுள்.

அடுத்த 12 வருடம் கழுதையிடம் வாங்கியது. அதுதான் கழுதை போன்று (குடும்ப) பாரத்தைச் சுமக்கிறான்.

அடுத்த 18 வருடம் நாயிடம் வாங்கியது. அதுதான் அந்தச் சமயத்தில் சொத்துச் சேர்ப்பதற்காக அல்லது சேர்த்த சொத்தை காப்பாற்றிக் கொள்வதற்காக நாய் மாதிரி அலைகிறான். இல்லையென்றால் காவல் காக்கிறான்.

அடுத்த 20 வருடம் குரங்கிடம் வாங்கியது. வயதாகி மரியாதை போய்... யார் என்ன சொன்னாலும் அவர்கள் சொல்வதைப் போன்று ஆட வேண்டிய நிலைமை.

அன்றைக்கு வாங்கிய 'ஆயுள் கடன்' இன்றைக்கு ஆயுள் முழுவதும் மனிதனை என்னபாடு படுத்திக் கொண்டிருக்கிறது பார்த்தீர்களா? ஒருவாரத்துக்கு முன் என் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன்.

"என்ன சேர்? கொஞ்ச நாளாக ஆபீஸ் பக்கமே உங்களைப் பார்க்க முடியவில்லை"என்றேன். அவர் எரிச்சலுடன் என்னை முறைத்துப் பார்த்துவிட்டுச் சொன்னார்:

" வீடு ஒன்று கட்டவேண்டுமென்று ஆரம்பித்தேன். அப்ருவலுக்காக நாய் மாதிரி அலைந்து கொண்டிருக்கிறேன். பின்னே எப்படி ஆபீஸ்க்கு வாறாது" என்று சொல்லிவிட்டு வேகமாக ஓடினான். இதற்கு என்ன அர்த்தம்? அவர் அந்த மூன்றாவது படியில் இருக்கிறார் என்று அர்த்தம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன்கருதி கல்வியமைச்சின் ஏற்பாட்டில் கருத்தரங்கு

(கொழும்பு)

அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள இடம்பெயர்ந்த மாணவர்களின் நன்மைகருதி கல்விக் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

வவுனியா மற்றும் நிவாரணக் கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு வவுனியா காமினி மகா வித்தியாலயத்திலும் துணுக்காய் , கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு வலயங்களிலும் இக்கருத்தரங்குகள் நடைபெற்றுவருவதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பாக இடம்பெயர்ந்து தற்போது தங்களது கல்வியை மீளத் தொடங்கியுள்ள மாணவர்களில் க.பொ.த.(உ/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக துரித மீட்டல் வகுப்புக்கள் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகிறது.

குறிப்பாக இந்த இடம்பெயர்ந்த வலயங்களில் இருக்கின்ற மாணவர்களுக்காக இந்த வகுப்புக்களை நடத்தி வருகின்றோம். யாழ். மாவட்டத்திலிருந்து தங்களது கல்வியை தொடங்கியிருக்கின்ற இடம்பெயர்ந்த மாணவர்களும் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த மாதம் ஆரம்பமாகியுள்ள இந்த வகுப்புக்கள் இம்மாத இறுதியில் முடிவடையவுள்ளது.

இந்த துரித மீட்டல் வகுப்புகளை கல்வி அமைச்சின் அனுசரணையூடாக கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி,றோயல் கல்லூரி போன்ற பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் நடத்துகின்றார்கள்.

இந்த துரிதல் மீட்டல் வகுப்புக்களுக்கு உதவி செய்த ஆசிரியர்கள் விரிவுரையாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு இந்த வகுப்புக்கள் அம்மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதுடன் குறித்த பலனை பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (6-4)

## கணனி அன்பளிப்பு

யாழ்ப்பாணம்)

யா/கட்டுடை சைவ வித்தியாசாலைக்கு கொழும்பு மேற்கு றோட்டறிக் கழக உத்தியோகத்தர் ஜெறோம் இராஜேந்திரா இரண்டு கணனிகளை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வைத்து இன்று வழங்கவுள்ளதாக கட்டுடை சைவ வித்தியாலய அதிபர் து.சிவஞானம் அறிவித்துள்ளார். (6)

## மகப்பேற்று அதிதீவிர சிகிச்சைப் பிரிவு திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் யுனிசெவ் அமைப்பின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மகப்பேற்று அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் திறப்பு விழா இன்று காலை 11 மணிக்கு இருதய சிகிச்சைப்பிரிவு *கத்லாப்* மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

## இராசி பலன்

*06 .07.2010*
*(ஆனி 22, செவ்வாய்க்கிழமை)*
*நவமி காலை 7 மணிவரை*
*அச்சுவினி பிற்பகல் 5.39 மணிவரை*
*இராகுகாலம் 2.58-4.28 மணிவரை*
*சுபநேரம் 10.28-11.58 மணிவரை*
*அமிர்த சித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | புதிய முயற்சி, பெரியோர் சந்திப்பு, ஜனவசியம், போசன சுகம். |
| இடபம் | தந்தை வழி உறவு, சுப காரியம் , பிரயாணம், கோபப்படுதல். |
| மிதுனம் | மனமகிழ்ச்சி, தெய்வசிந்தை, தனதானிய சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| கடகம் | இனிய செய்தி, நண்பர்கள் உதவி, தொழில் மேன்மை, காரிய அனுகூலம். |
| சிங்கம் | சரீரப் பிரயாசை, பெரியோர் உதவி, அஜீரணக் கோளாறு, பிரயாண நன்மை. |
| கன்னி | போசன சுகம், எதிர்பாராத பகை, முயற்சி தாமதம், அதிக செலவு. |
| துலாம் | அபூர்வ சந்திப்பு, பிரயாணம், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை |
| விருச்சிகம் | சுகவாழ்வு, செய்தொழில் மேன்மை, நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம். |
| தனுசு | பயந்த சுபாவம் , எடுத்த காரியம் தாமதமாகும் , சுபசெலவு , வியாபார நன்மை. |
| மகரம் | ரோகபயம் , கல்வியில் முன்னேற்றம் , தொழில்நன்மை , உறவினர் சந்திப்பு. |
| கும்பம் | கூட்டு முயற்சி , பிரயாணம் , ஜனவசியம் , உறவினர் சந்திப்பு. |
| மீனம் | எடுத்த காரியம் தாமதமாகும் , தனவிரயம் , மனஸ்தாபம் , தெய்வசிந்தை. |

வளவன்

## மாகாண தகவல் தொழில் நுட்பவியல் நிலையத்திற்கு விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தகவல் தொழில் நுட்பவியல் நிலையத்தினால் வவுனியாவில் அமைக்கப்படவுள்ள மாகாண தகவல் தொழில் நுட்பவியல் நிலையத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில்" மாகாண தகவல் தொழில் நுட்பவியல் நிலைய முகாமையாளர் 01", "மாகாணக் தகவல் தொழில் நுட்பவியல் நிலைய விரிவுரையாளர் -02" ஆகிய பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிடலாம் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (6-4-7)



*ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, சிறப்பு விருந்தினர்களான சிவானந்த சர்மா, அதிபர் செல்வி ந.பிரதா ஆகியோரை பாண்ட் வாத்திய அணித் தலைவர் கைலாகு கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.*

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 130 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 55 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 120 | 130 |
| பூசனி | 40 | 40 | 40 |
| புடோல் | 25 | 30 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 110 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 90 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 60 |
| பயற்றங்காய் | 60 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 140 | 110 |
| பீற்றூட் | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 180 | 150 | 240 |
| போஞ்சி | 100 | 100 | 90 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 90 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |



இலங்கை வங்கி சுன்னாகக் கிளையினரால் குப்பிளான் பகுதி விவசாயிகளுக்கான விவசாயக் கடன் வழங்கும் நிகழ்வு அண்மையில் வைபவரீதியாக குப்பிளான் விவசாய சம்மேளன பொதுமண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வங்கியின் கடனதிகாரி பு.காந்தரூபன் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் வங்கி முகாமையாளர் சி.பெ.அரசகுமார், உடுவில் பிரதேச செயலகத்தின் உதவித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார், வங்கி உத்தியோகத்தர் நா.சுகந்தி, விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரட்ணராஜா மற்றும் வாடிக்கையாளர்கள் நிற்பதையும் வங்கி முகாமையாளர் சி.பெ.அரசகுமார் பயனாளி ஒருவருக்கு கடன் தொடர்பான ஆவணத்தைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

## செயலமர்வு

(அல்வாய்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி,தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார், மடு, வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு ஆகிய கல்வி வலயங்களில் கடமையாற்றும் கோட்டக்கல்வி அலுவலர்கள், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கான செயலமர்வு எதிர்வரும் 9ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள மாகாணக் கல்வித் திணைக்கள முதன்மை நிலை அலுவலகத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வுகளில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களை தவறாது கலந்துகொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.செல்வின் இரேனியஸ் அறிவித்துள்ளார். (6-19)

## அல்வாய் நாவலடி திக்கம் வீதி பல வருடங்களின் பின் புனரமைப்பு

(பருத்தித்துறை)

அல்வாய் நாவலடி திக்கம் வீதியானது, 43 இலட்சம் ரூபா செலவில் பல வருடங்களின் பின்னர் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தி திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

சுமார் 850 மீற்றர் தூரம் கொண்ட வீதிப் புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குறித்த இவ்வீதியின் இரு பக்கங்களும் அகலிப்பு செய்யப்படுவதோடு வீதி முழுமையான புனரமைப்பும் செய்யப்படவுள்ளது.

இதனையடுத்து இப் பகுதி மக்கள் நன்மையடையவுள்ளனர். மேலும் இத் திணைக்களத்தினால் மந்திகை -வல்லிபுரம் வீதி, பருத்தித்துறை – தும்பளை வீதி என்பனவும் வீதி அகலிப்புச் செய்யப்பட்டு, புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் துரிதமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-10)

## தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளோருக்கு

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி 2010 இல் முதல் இடத்தைப் பெற்ற போட்டியாளர்கள் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்களில் கையொப்பம் இடவேண்டியுள்ளதால் குறித்த போட்டியாளர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பொறுப்பாசிரியருடன் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு மாகாண கல்வித் திணைக்களத்தினால்தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-7)

## மப்பும் மந்தாரமுமான காலநிலை

இன்று மப்பும் மந்தாரமுமான காலநிலை காணப்படுமென்று திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டலத்தில் மேல்மட்டத்தில் காற்றின் வேகம் குறைவாகக் காணப்படுவதாலும் இடைப்பகுதியில் காற்றின் வேகமானது கூடுதலாக இருப்பதால் மப்பும் மந்தாரமுமான நிலை காணப்படுமெனவும் கிழக்கு மாகாணத்தில் ஓரளவு மழை பெய்யும் சாத்தியம் தென்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

### யாழ். செய்திகள்

## இலையான் பெருக்கம் அதிகரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் சில இடங்களில் இலையானின் பெருக்கம் அதிகமாகக் காணப்படுவதால் வயிற்றோட்ட நோய் ஏற்படலாமென மக்கள் அச்சமடைகின்றனர்.

சுகாதாரப் பிரிவினர் இதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது சில நாட்களாக வீடுகளிலும் சில சிற்றுண்டிச் சாலைகளிலும் இலையான்கள் பெருக்கம் காணக்கூடியதாக இருக்கிறது. (6-10)

## அர்ச்சுனா, ராஜீவனின் சிறப்பாட்டத்தினால்

# மகேசன் அணி 8 ஓட்டங்களினால் கலைமகள் அணியை தோற்கடித்து சம்பியனானது

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் வடமராட்சி விளையாட்டு கழகங்களுக்கிடையில் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த ருவென்ரி -20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கழக மைதானத்தில் நடைபெற்றது.



இதில் அல்வாய் கலைமகள் அணியை எதிர்த்துகரவெட்டி மகேசன் அணி மோதியது.நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மகேசன் அணி தலைவர் ராஜீவன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதற்கிணங்க முதலில் துடுப்பெடுத்தாடிய மகேசன் அணியின் முன்வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தனர்.

ஒரு கட்டத்தில் 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், தடுமாறிக் கொண்டிருந்த அணியை 6 ஆவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த அர்ச்சுனா, சிறீகாந்தா தமது இணைப்பாட்டத்தின் மூலம் 90 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

இறுதியில் 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 103 ஓட்டங்களை மகேசன் அணியினர் பெற்றனர்.

இதில் அர்ச்சுனா 4 சிக்சர்கள் 2 பவுண்ட்ரி அடங்கலாக 39 ஓட்டங்களையும் சிறீகாந்தா 4சிக்சர்கள் அடங்கலாக 36 ஓட்டங்களைப் பெற்றனர்.கலைமகள் அணியின் பந்து வீச்சின் சார்பில் கோகுலன் 5,சிலோஜன் 2, காந்தரூபன்,செந்தூரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கலைமகள் அணி காந்தரூபனின் நிதான ஆட்டத்தின் மூலம் 18.2 ஓவர்களில் 95 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் காந்தரூபன் 2 சிக்சர்கள், ஒரு பவுண்டரி அடங்கலாக 21 ஓட்டங்களையும் கோகுலன் 2 சிக்சர்கள் அடங்கலாக 17 ஓட்டங்களையும் சிலோஜன் 2 சிக்சர்கள் அடங்கலாக 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

மகேசன் அணியின் பந்து வீச்சின் சார்பில் ராஜீவன் 4, கமல் 2, விக்கெட்டுக்களையும் ராஜதீபன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இறுதியில் எட்டு ஓட்டங்களினால்,மகேசன் அணி வெற்றி பெற்று மைக்கல் கழகத்தின் ருவென்ரி- 20 போட்டியில் சம்பியன் ஆகியது.

இவ் ஆட்டத்தின் ஆட்டநாயகனாக மகேசன் அணியின் அர்ச்சுனா தெரிவு செய்யப்பட்டார்.

இவ் இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி காங்கரா கலந்துகொண்டு சிறப்பித்தார். (6-24)

## வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம்


(யாழ்ப்பாணம்)

வடமாகாண தெங்கு செய்கையாளர் சங்க புனரமைப்புக் கூட்டம் அண்மையில் யாழ். பிரதேச செயலக பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் தலைவராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான கலாநிதி எஸ். மோகனதாஸ், செயலாளராக வரணி முன்னாள் கொத்தணி அதிபர் சி.துரைராசா,பொருளாளராக த.முருகமூர்த்தி ஆகியோருடன் ஆறு பேர் சங்க அங்கத்தவர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இக்கூட்டத்தில் தென்னை மரங்களுக்கு உரமானியம் வழங்கல், புது நடுகைக்கான மானியம் வழங்கல், இழந்த காணிகளை உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுத்தல், கண்ணிவெடிகளை அகற்றி காணிகளைத் துப்புரவாக்குதல், இழந்த தென்னைகள், பாவிக்கப்பட்ட இயந்திரங்கள் , கால்நடைகள் போன்றவற்றுக்கு நஷ்டஈடு வழங்குதல், இயந்திர சாதனங்களின் பிரிவு ஒன்றை வடமாகாணத்தில் ஸ்தாபித்தல் போன்றவற்றுடன் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்வதற்காக அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண ஆளுநர் ஆகியோரை சந்திப்பதற்காக ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தென்னைச் செய்கையாளர்கள் தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் பிராந்திய காரியாலயத்துடன் தொடர்புகொண்டு உரிய விண்ணப்பங்களை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் வடமாகாண தெங்குச் செய்கையாளர் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-4)



யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மாணவி ஒருவருக்கு சின்னஞ்சூட்டுவதையும் மேடையில் அதிபர் வே.ஞானகாந்தன் அமர்ந்திருப்பதையும் பழைய மாணவத் தலைவர்கள் புதிய மாணவத் தலைவர்களிடம் பொறுப்புக்களைக் கையளிப்பதையும் படங்களில் காலணாம்.

## 2009 இல் டிப்ளோமா கற்கைக்கு பதிவு செய்தோருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் கடந்த வருடம் குடிசார் இயந் திரவியல், கணிய அளவையியல் பயிற்சி நெறிக்கான நஷனல் டிப்ளோமா, டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு பதிவுசெய்த மாணவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்கு தவறாது சமுகமளிக்குமாறு மேலதிக பணிப்பாளர் வெ.சுந்திரலிங்கம் அறிவித்துள்ளார்.

அத்துடன் மேற்படி கற்கைக்கு விண்ணப் பித்தோர் தாங்கள் செலுத்திய கட்டணத்திற் கான பற்றுச் சீட்டையும் தவறாது கொண்டு வருமாறு அவர் கேட்டுக் கொள்கின்றார். (6)

## நியூயோர்க் விமான நிலையத்தில் வெடிகுண்டு மிரட்டல்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஜான். எப்.கென்னடி சர்வதேச விமான நிலையம் உள்ளது.இது எப்போதும் பரபரப்பாக இயங் கக்கூடியது. நேற்றுமுன் தினம் அமெரிக் காவின் சுதந்திரதினம். எனவே, தேசிய விடுமுறை நாளான நேற்று முன்தினம் ஏராளமானவர்கள் சுற்றுலா சென்றனர்.

எனவே, விமான நிலையத்தில் பயணி கள் கூட்டம் அலைமோதியது. இதற்கிடையே மாலை 5.40 மணி அளவில் விமான நிலைய அதிகாரிகளுடன் ஒரு பெண் தொலை பேசியில் தொடர்புகொண்டாள்.

அதில் அவள் விமான நிலையத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது. அது இன்னும் சிறிதுநேரத்தில் வெடிக்கும் என மிரட்டல் விடுத்தாள்.

இதனால் பரபரப்பான ஊழியர்கள் இது குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். உடனே அவ்விடத்திற்கு பொலி ஸார் மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் வர வழைக்கபப்ட்டனர்.

இதையடுத்து பயணிகள் அனைவரும் விமான நிலையத்தில் இருந்து வெளியேற் றப்பட்டனர். விமான நிலையம் முழுவதும் சோதனையிடப்பட்டது. இதனால் பயணிகளுக் கிடையே பதற்றமும் பீதியும் ஏற்பட்டது. முடி வில் வெடி குண்டு எதுவும் சிக்கவில்லை.

வெறும் புரளி எனத் தெரியவந்தது. இருந்தும் இந்த செய்தி அமெரிக்காவில் உள்ள அனைத்து விமான நிலையங்களுக் கும் பரவியது. எனவே அனைத்து விமான நிலையங்களிலும் பதற்றமும், பரபரப்பும் நிலவியது.

இதற்கிடையே விமான நிலையத்துக்கு தொலைபேசியில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த பெண்யார்? என பொலிஸார் விசார ணை மேற்கொண்டு வருகின்றனர். (6)

## கிழக்கில் ஐம்பது தாதியர்களை உடனடியாக நியமிக்க பணிப்புரை

(கொழும்பு)

கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 50 தாதியரை உடனடியாக நியமிக்க சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரி களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் அமைச்சர் மைத்திரி பாலா விடம் நேரடியாக விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த உடனடி நியமனம் வழங் கப்படவுள்ளது.

சுகாதார அமைச்சர் தலைமையில் மாகாண சுகாதார அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

இதன் போது மாகாண சுகாதார அமைச்சர்கள் தமதுதேவைகள் தொடர்பில் சுகாதார அமைச்சரிடம் சுட்டிக்காட்டினர்.

இதற்கமைய திருமலை வைத்திய சாலைக்கு சீ.டி. மற்றும் எம்.ஆர்.ஐ. ஸ்கான் வசதிகளை ஏற்படுத்துதல் ,மட்டக்களப்பு போதனாவைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவைஅபிவிருத்தி செய்தல் போன்றன குறித்து கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டிய போது இது தொடர்பில் கூடிய விரைவில் உரிய நடவடிக்கையை எடுப்பதாக சுகாதார அமைச்சர் உறுதியளித்தார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் உள்ள மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வைத்தியசாலைகளுக்கும் பொறுப்பாக விருந்து செயற்படுமாறும் அமைச்சர் மைத்திரி பால கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரை கேட்டுக்கொண்டார். (6)

## ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வு காணப்படும்

### கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆசிரியர்களின் எண்ணிக்கையை சமப் படுத்துவதன் மூலம் ஆசிரியர் பற்றாக் குறைக்கு தீர்வு காணப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

ஆசிரியர்களின் எண்ணிக்கையில் சம னற்ற தன்மை காரணமாக கஷ்டப் பாட சாலைகளில் அதிகளவிலான ஆசிரியர் பற் றாக்குறை காணப்படுவதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

40 இலட்சம் அளவிலான மாணவர் களின் நன்மை கருதி இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரி வித்தார்.

மேலும் கஷ்டப் பாடசாலைகளுக்கு வழங் கப்படும் ஆசிரியர் நியமனங்களை குறுகிய காலத்திற்குள் வேறு இடங்களுக்கு மாற்றிக் கொள்ளக்கூடிய நிலை காணப்படுவதாகவும் இதனால் இவ்வாறான பாடசாலைகளில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவு வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையை மாற்றியமைத்து சகல பாடசாலை மாணவர்களுக்கும் கல்வி வாய்ப் பினைப் பெற்றுக் கொடுப்பதற்கான காலம் ஏற்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார். (6)



கொழும்பில் நேற்று முன் தினம் நடை பெற்ற 2010 ஆம் ஆண்டுக் கான இலங்கை அழகுராணிப் போட்டியின் இறுதிச் சுற்றில் இசங்கா மதுர சிங்க (23 வயது) முடிசூட்டப்பட்டார். 12 போட்டியாளர் களுக்கு மத்தி யில்அழகுராணி யாகத் தெரிவு செய்யப்பட்ட இசங்கா, களனி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுபான்மையினர் மீது ஏற்படுத்திய அநீதியே எமது பின்னடைவுக்குக் காரணம்

### அமைச்சர் எஸ்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது, சிறுபான்மை மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதி காரணமாகவே நாடு பல்வேறு பின்ன டைவுகளைச் சந்தித்தது என்பது புலனாகிறது.

தொடர்ந்தும் அவ்வாறு நடைபெறாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டுமென உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

கண்டி விகாரமகாதேவி மகளிர் கல் லூரியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 1936 ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்த டொனமூர் ஆட்சிக் காலக் கவுன்ஸிலில் சிங்கள மக்கள் மட்டுமே அமைச்சரவை அந்தஸ்து பெற்றிருந்தனர். அதனால் ஏற்பட்ட அதிருப் தியின் வெளிப் பாடாகவே அன்று 50:50 அதி காரம் தேவைஎன்ற கோரிக்கை எழுந் தது. அதே போல் 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் காரணமாக இனக் கலவரம் ஒன்று வெடித்தது.

1972,1978 திருத்தங்கள் உட்பட இன்னும் பல விடயங்கள் தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் இளைஞர் போராட்டமாக மாறி 30 வருட யுத்தமாக முடிவுற்றது. இதன் மூலம் நாம் சந்தித்த அனுபவங்கள் இன் னும் நீங்கவில்லை.

எனவே சிறுபான்மை மக்களின் உரிமை கள் பற்றியும் நாம் சிந்தித்து அநீதி ஏற்படாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார். (6)

## போரினால் பாதிக்கப்பட்ட பலர் மன அழுத்தத்தால் பாதிப்பு

### வவு.அருட்தந்தை தெரிவிப்பு


(கொழும்பு)

வடமாகாணத்திலுள்ள போரினால் பாதிக் கப்பட்ட மக்களுள் பெரும்பாலானவர்கள் மன அழுத்தத்துடன் காணப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வவுனியாவுக்குப் பொறுப்பான அருட் தந்தை எமிலியனோஜ்பிள்ளை சந்தியாம் பிள்ளை இதனை தெரிவித்துள்ளார்.

அவர்கள் பல நாட்களாக முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் விளைவாக இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிலையில் குடும்பங்களிலிருந்து பிரிந்து சென் றுள்ள அவர்களை ஒன்றிணைக்க வேண் டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள் ளார். (6-4)




வடமாகாண புற்றுநோய், எயிட்ஸ் நோய்த் தடுப்புச் சங்கத்தில் வைத்து 85 புற்றுநோயாளர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. சுவிற்சர்லாந்தில் வசிக்கும் சு.பாலசுப்பிரமணியம், சு.ஜெயமோகன் ஆகியோர் அன்பளிப்புச் செய்த மேற்படி உணவுப் பொருட்களை அவர்கள் சார்பாக திருமதி அமிர்தகௌரி தெய்வேந்திரன், புற்றுநோயாளர் ஒருவருக்கு மேற்படி உணவுப் பொருட்களை கையளிப்பதையும் சங்க நிர்வாக உத்தியோகத்தர் கூ.நடராசா நன்றியுரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# கிளி.மத்திய கல்லூரி இடைத்தங்கல் முகாம் மக்கள் இடமாற்றப்பட்டுள்ளனர்

(கிளிநொச்சி)

முறிகண்டி பிரதேசத்தைச் சேர்ந்த ஏ9 வீதியின் கிழக்குப் பகுதியில் உள்ள சாந்தபுரம் கிராமத்தின் மீள்குடியேற்றத்திற்கென அழைத்துச் செல்லப்பட்டு கிளிநொச்சி மத்திய கல்லூரி இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த 200 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்போது சாந்தபுரம் பாடசாலைக் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சாந்தபுரம் பாடசாலை கட்டடம் சிறியதோர் கட்டடமாகையால் அங்கு சென்றுள்ள மக்கள் அனைவரும் அங்கு தங்கியிருப்பதற்கு வசதிகள் போதாத காரணத்தினால் பாடசாலைக் கட்டடத்தின் தாவாரத்திலும் வேலியை அண்டிய பகுதிகளிலும் பற்றைகள் மிகுந்த இடங்களில் கூடாரங்களை அமைத்து தங்கியிருக்க நேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு தேவையான மலசலகூட மற்றும் குடிதண்ணீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு சமைத்த உணவும் அதிகாரிகளினால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.உள்ள தமது பாடசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டிருந்தாலும் தங்களை சொந்தக்காணி களில் மீள்குடியேற்றம் செய்வார்களா என் பது சந்தேகமாகவும் பயமாகவும் இருப்பதாக அங்கு சென்றுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

சாந்தபுரம் கிராமத்தில் ஏற்கனவே இராணுவத் தேவைக்காக காணிகள் எடுக்கப்பட்டு விட்டதாக வெளியாகியுள்ள தகவல்களினாலும் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்தக் காணிகளில் இன்னும் மீள்குடியேற்றம் செய்யாததனாலுமே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மெனிக்பாமில் இருந்து மீள்குடியேற்றத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகியும் இன்னும் தங்களை மீள்குடியேற்றம் செய்யாததனால் மிகுந்த மன உளைச்சல்களுக்கும் கஷ்டங்களுக்கும் தாங்கள் உள்ளாகியிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையில் தங்கியுள்ளவர்கள் தமது காணிகளைச் சென்று பார்க்கக்கூடியதாக இருந்த போதிலும் பத்தாம் ஒழுங்கைக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ காவலரணுக்கு அப்பால் எவரையும் செல்வதற்கு அனுமதிக்கிறார்கள் இல்லை. என்றும் மக்கள் செல்ல முடியாத பகுதிகளில் உள்ள வீடுகளில் உள்ள கட்டடப்பொருட்கள், கூரைகள், மரம்தடிகள் என்பன ஏற்றிச் செல்லப்படுவதுடன் தென்னைகளில் உள்ள தேங்காய்கள், ஓலைகள் என்பவற்றையும் பலர் வெட்டி வாகனங்களில் ஏற்றிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (6)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமூகசேவையில் ஆர்வமுள்ள சனசமூக பிரதிநிதிகளுக்கும் சிவில் அலுவலக இணைப் பதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று காலை 11.30 மணிக்கு யாழ்.பொதுநூலக சிற்றுண்டிச் சாலையில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சனசமூக நிலையப் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாட இருப்பதால் அனைத்துப் பிரதிநிதிகளையும்தவறாது பங்குபற்றுமாறு யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கேட்டுக் கொள்கின்றார். (6)

# சிங்கள பொலிஸாருக்கு தமிழ்மொழிப் பயிற்சி

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் முதல் தடவையாக தமிழ் மொழிப் பயிற்சிப் பிரிவு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் 100 பேருக்கான தமிழ் மொழி பயிற்சிகள் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டன.

6மாத பயிற்சிநெறியை ஆரம்பித்துள்ள இவர்கள், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

# இலங்கையில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணப் பாவனை

## ஐரோ. ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்துவதாக, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

அண்மையில் நடைபெற்ற சர்வதேச கோஃபே சம்மேளத்தின்போது இந்தக் குற்றச் சாட்டு விடுக்கப்பட்டதாகக் கடற்தொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்டவிரோத மீன்பிடி உபகரணப் பாவனை குறைவடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டியதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை கடற்பரப்பில் விசேட பாதுகாப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதால் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கு உடனடியாகக் கடும் தண்டனை வழங்கப்படுகிறது.

இதனால் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் சட்டவிரோத மீன்பிடி உபகரணப் பாவனை வெகுவாகக் குறைவடைந் துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (6-4)

# போதனாசிரியர்களுக்கான பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் மோட்டார்சைக்கிள் திருத்துகை வெளியிணைப்பு இயந்திரம் திருத்துகை ஆகிய கற்கைநெறிகளைக் கற்பிப்பதற்கு தகுதியான போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் கல்வி, தொழில் அனுபவ சான்றிதழ்களுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இல. 375, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மாவட்டப் பணிமனையில் நடைபெறும் நேர்முகத் தேர்விற்கு நேரில் சமுகம் தருமாறும் அத்துடன் மேற்படி பதவிகளுக்காக கொழும்பில் நடைபெற்ற நேர்முகத்தேர்விற்கு சென்றவர்களையும் அன்றைய தினம் சமுகம் தருமாறும் சபையின் மாவட்ட இணைப்பாளர் இரா அகிலன் அறிவித்துள்ளார். (6-4)

# மோட்டார் சைக்கிள்களை இடைமறித்து கடும் சோதனை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார் கடந்த 3ஆம் திகதியன்று வீதியால் இரவுவேளை சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள்களை இடைமறித்து கடும் சோதனைகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல முக்கிய கேந்திர நிலையங்களில் கூடுதல் பொலிஸார் வீதிகளில் நிறுத்தப்பட்டு சோதனைகள் நடைபெற்றது.

இச் சோதனையின் போது மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, சாரதியின் பெயர், விலாசம், வயது, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை தமது புத்தகத்தில் குறித்து சாரதியிடம் கையொப்பமும் பொலிஸார் பெற்றனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது, பருத்தித்துறையில் அண்மையில் நடந்த நிகழ்வு ஒன்றின் போது மூன்று மோட்டார் சைக்கிள்கள் திருட்டுப் போனதாகவும் அதனையடுத்தே இந் நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-10)



மீன் ஏல விற்பனை நிலையமும் விநாயகர் கடற்தொழில் கூட்டுறவுச் சங்க காரியாலமும் யாழ்.கொய்யாத்தோட்டத்தில் நேற்று திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி திறந்துவைப்பதையும் அருகில் யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.மாநகர சபை பிரதிமேஜர் இளங்கோ மற்றும் விருந்தினர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# இலங்கையில் முதலீடு செய்யும் நாடுகளில் தென்கொரியா இரண்டாமிடத்தில்

(கொழும்பு)

இலங்கையில் முதலீடு செய்யும் நாடுகள் வரிசையில் தென்கொரியா இரண்டாமிடத்தில் உள்ளதாகத் தென்கொரியாவுக்கான இலங்கையின் பதில் தூதுவர் லக்ஷித ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் காணப்படும் அமைதிச் சூழல் காரணமாக தென்கொரிய முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த அவர் இலங்கையில் முதலீடு செய்யும் நாடுகள் வரிசையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் தென்கொரியா முதலாமிடத்தில் இருந்தது எனக் குறிப்பிட்டார்.

எனினும் மலேசியாவில் முதலீடுகள் அதிகரித்ததன் காரணமாகத் தென்கொரியா இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டது எனவும் தென்கொரிய முதலீட்டாளர்கள் இலங்கை பற்றிய தற்போதைய நிலைமைகள் குறித்து தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டறிவதாகவும் அவர்கூறியுள்ளார். (6)

## போலந்து நாட்டின் புதிய ஜனாதிபதி தெரிவு

போலந்து நாட்டில் ஜனாதிபதியாக இருந்த லொக்கசின்ஸ்சி கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி ரஷ்யா சென்ற போது விமான விபத் தில் பலியானார். இதில் அவரது மனைவி உட்பட 94 பேர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க தேர்தல் நடந்தது. இதில் ஆளும் கட்சி சார்பில் இடைக் கால ஜனாதிபதி புரோனிஸ்லா கொமொரோவ்ஸகியும் எதிர்க்கட்சியின் சார்பில் ஜாரோஸ்லா கசின்ஸ்கியும் போட்டியிட்டனர்.

நேற்று முன்தினம் வாக்கு எண்ணிக்கை நடந்தது. இதில் இடைக்கால ஜனாதிபதி கொமொரோவ்ஸ்கி 52.6 சதவீதம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். (6)

# யாழ்.மாவட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனங்களின் முதலாவது அவை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனங்களின் முதலாவது அவை (District Enterprise Forum) கடந்த 24 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.



யாழ்.மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரச அதிபரின் ஒத்துழைப்புடன் மாவட்ட மட்டத்தில் தீர்வு காணும் நோக்குடன் இது உருவாக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் தீர்வு எட்டப்பட முடி யாத பிரச்சினைகள் மாகாண மட்டத்திலும் அல்லது தேசிய மட்டத்தில் முன்னெடுக்கப்படத்தக்க பொறிமுறையினை மேற்படி அமைப்பு கொண்டுள்ளது.

அரசாங்க அதிபரை தலைவராகக் கொண்டு சம்பந்தப்பட்ட அனைத்து திணைக் களத் தலைவர்க,மாவட்ட வர்த்தக மற்றும் கைத் தொழில் மன்றங்கள், கூட்டுறவுத் துறை, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இவ்வமைப்பு செயற்படுகின்றது.

மேலும்யாழ்ப்பாணம்வர்த்தகதொழில்துறை மன்றம் மற்றும் இலங்கை வர்த்தக மன்றங்களின் சம்மேளனம் ஆகியவற்றின் பிரதான பங்களிப்புடன் மேற்படி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# உலகப் புத்தக தின நிகழ்வில் பனையின் சிறப்புப் பற்றிய நூல்வெளியீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் பிரதான மற்றும் கிளை நூலகங்கள் இணைந்து உலக புத்தகதின நிகழ்வை நேற்று நடத்தியது.

சாவகச்சேரி பிரதான நூலகர் திருமதி க.கணேசானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகரசபை செயலாளர் செல்வி. வி.சிவக்கொழுந்து பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

நல்லூரைச் சேர்ந்த ச.சு. பொன்னம்பலம் முதலியார் எழுதிய பனையின் சிறப்புகள் பற்றி தெளிவாகக் கூறும் 'பனை நூறு' என்ற நூலைப்பற்றி வவுனியா இந்து அரச ஊழியர்கள் இணையத் தலைவர் வே.கே. தனபாலன் ஆசிரியர் ஆய்வு செய்தார்.

இதில் கலந்துகொண்ட மாணவர்கள் மத்தியில் ஆய்வாளரால் விடுக்கப்பட்ட வினாக்களுக்கு பதிலளித்த மாணவிகளுக்கு பெறுமதி மிக்க புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. (6-29)

# கொடுப்பனவுகளை பெற முடியாமல் அவதியுறும் ஒப்பந்தகாரர்கள்

(பருத்தித்துறை)

கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர்கள் தமது முன்னைய கொடுப்பனவுகளை பெறுவதில் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

குறிப்பாக 2006ஆம் ஆண்டுக்கு முன்னர் அப்பகுதியில் உள்ள பிரதேச சபைகளினால் வேலைகள் வழங்கப்பட்டு செய்யப்பட்ட வேலைகளுக்கு முழுமையான கொடுப்பனவுகளை ஒப்பந்தக்காரர்கள் பெற்றுக்கொள்ளவில்லை.

அங்கு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, ஒப்பந்தக்காரர்கள் வன்னியை விட்டு வெளியேறியிருந்தனர். தற்போது வேலை செய்த ஆவணங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் இல்லாததினால், ஒப்பந்தக்காரர்கள் தமது கொடுப்பனவுகளை பெற முடியாமல் அவதியுறுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6-10)

# வெளிநாடுகளிலிருந்து பேருந்துகள் இறக்குமதி

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் 500 பேருந்துகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் என்.பி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

இந்த பேருந்துகள் நாடு முழுவதற்குமான போக்குவரத்துச் சேவைகளுக்காக பயன்படுத்தப்படவிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இவற்றுள் சுமார் 100 பேருந்துகள் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான அரை சொகுசு சேவைகளில் ஈடுபடுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6-4)




யா/ மகாஜனாக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கலை நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூற்றாண்டுப் பாடசாலைகளின் கலைச்சங்கம நிகழ்வுகள் இடம்பெற்றன.இதில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் தென்மோடிக் கூத்தினையும்,மானிப்பாய் இந்துக் கல்லூரியின் கலைச் சங்கம நிகழ்வினையும்,மகாஜனா கல்லூரியின் வாத்திய விருந்து நிகழ்வினையும்,அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் கோலாட்ட நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்:-எஸ்.ஏ.சந்திரபவன்

## மாதிரி பரீட்சை–10
## வினாத்தாள் –I

நேரம்- 45 நிமிடம்

★ 01 தொடக்கம் 32 வரையிலான சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. கீழுள்ள சொற்களுடன் பொருந்தும் படம் எது?

| நியாயம் | நேர்மை | நடுவுநிலைமை |
|---|---|---|



1) 2) 3)

02. கீழுள்ள சொற்களுடன் பொருந்தும் படம் எது?


| அடையாளம் | நிறுவனம் | குறியீடு |
|---|---|---|



1) 2) 3)

★ கீழே 3ஆம் 4ஆம் வினாக்களில் உருக்களைக் கொண்ட மூன்று கூடுகள் தரப்படுகின்றன. அதிலுள்ள உருக்களின் அடிப்படையில் ஒரு கூடு சற்று வேறுபடுகின்றது. அக்கூட்டினைத் தெரிவு செய்க.


03.




கூடு A கூடு B கூடு C

i) கூடு A ii) கூடு B iii) கூடு C

04.



கூடு A கூடு B கூடு C

i) கூடு A ii) கூடு B iii) கூடு C

★ பின்வரும் கவிதையை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

*இருள் கிழித்து அவன் எழவே*
*இதழ் விரித்து இவள் மலர்வாள்*
*இவள் மலர்ந்த மணம் அறிந்து*
*சிறகடித்துத் தேனருந்த*
*பல நிறத்தாள் பறந்து வந்தாள்.*

05. இருள் கிழித்து எழுந்தவன் யார்?
1) நட்சத்திரம் 2) சூரியன் 3) சந்திரன்

06. இதழ் விரித்து மலர்ந்தவள் யார்?
1) முகம் 2) சிரிப்பு 3) பூ

07. சிறகடித்து வந்த பல நிறத்தாள் யார்?
1) வண்டு 2) தேனீ 3) வண்ணத்துப்பூச்சி

★ நான்கு நண்பர்கள் 400 மீற்றர் ஓட்டப் போட்டியை ஓடி முடித்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| றொபட் | ரஹீம் | ராம் | பாரத் |
|---|---|---|---|
| 47 செக்கன் | 45 செக்கன் | 44 செக்கன் | 50 செக்கன் |

08. இவர்களில் முதலிடத்தைப் பெற்றவர் யார்?
1) றொபர்ட் 2) ரஹீம் 3) ராம் 4) பாரத்

09. 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்ற ஒழுங்குமுறையைக் காட்டும் விடை யாது?
1) றொபர்ட், ரஹீம், ராம், பாரத்
2) பாரத், ராம், ரஹீம், றொபர்ட்
3) ராம், ரஹீம், றொபர்ட், பாரத்

★ கீழ்வரும் அட்டவணையை அவதானித்து 10ஆம், 11ஆம், 12 ஆம் வினாக்களின் விடைகளைத் தெரிவு செய்க.

| நிகழ்ச்சிகள் | பெண்கள் | ஆண்கள் | சிறுவர்கள் |
|---|---|---|---|
| நிகழ்ச்சி A | 425 | 225 | 350 |
| நிகழ்ச்சி B | 370 | 140 | 490 |
| நிகழ்ச்சி C | 240 | 230 | 530 |


ஒரு பிரதேசத்தில் வாழும் குறிப்பிட்ட 1000 பேரிடையே தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூன்றினது விருப்பத்தின் அடிப்படையில் நடாத்தப்பட்ட தகவல்களே மேலுள்ளவையாகும்.

10. சிறுவர்கள் அதிகம் விரும்பிய நிகழ்ச்சி எதுவாகும்?
1) நிகழ்ச்சி A 2) நிகழ்ச்சி B 3) நிகழ்ச்சி C

11. மூன்று நிகழ்ச்சிகளையும் அதிகம் விரும்பாத பிரிவினர் யார்?
1) பெண்கள் 2) ஆண்கள் 3) சிறுவர்

12. நிகழ்ச்சி A யை அதிகம் விரும்பிய பிரிவினர் நிகழ்ச்சி C யை விரும்பும் எண்ணிக்கை யாது?
1) 240 2) 230 3) 530




13. அந்தப் பந்தில் எத்தனை நிறங்கள் காணப்படும்?
1) இரண்டு 2) மூன்று 3) ஆறு

14. B பகுதியின் எதிர்ப்பக்கம் எதுவாக இருக்கும்?
1) A பகுதி 2) C பகுதி 3) E பகுதி

★ பின்வரும் தகவல்களை வாசித்து 15ஆம் 16 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| பாலாவின் கடையில் 3 பென்சில்கள் 12 ரூபா | தீபனின் கடையில் ஒரு பென்சில் 5 ரூபா |
|---|---|

15. இரு கடைகளுக்கும் இடையில் ஒரு பென்சிலின் விலையில் உள்ள வேறுபாடு எவ்வளவாகும்?
1) ஒரு ரூபா 2) இரண்டு ரூபா
3) மூன்று ரூபா

16. தீபனின் கடையில் 4 பென்சில்கள் வாங்கும் பணத்திற்கு பாலாவின் கடையில் எத்தனை பென்சில்கள் வாங்கலாம்?
1) இரண்டு 2) மூன்று 3) ஐந்து

★ 17 ஆம், 18ஆம் 19ஆம் வினாக்களின் சரியான விடையைத் தெரிவு செய்க.

17. | 9, ஜனவரி 2009 | இத் தினத்திலிருந்து சரியாக மூன்று வாரங்கள் விடுமுறை பெறும் சாரங்கன், மீண்டும் வேலைக்குச் செல்லும் தினத்தை சரியாகக் காட்டும் விடை எது?

1) 29, ஜனவரி 2009 2) 30, ஜனவரி 2009 3) 31, ஜனவரி 2009



18. சாரங்கன் மீண்டும் வேலைக்குச் சென்றது ஒரு புதன்கிழமை எனின், அவன் விடுமுறை பெற்ற தினம் என்ன கிழமையாக இருக்கும்?
1) சனிக்கிழமை
2) வியாழக்கிழமை
3) புதன்கிழமை


19. விடுமுறை பெற்ற மூன்று வார காலத்தினுள் வந்துள்ள சனி, ஞாயிறு தினங்கள் தவிர்ந்த வார நாட்கள் எத்தனையாகும்?
1) 16 நாட்கள் 2) 17 நாட்கள் 3) 18 நாட்கள்

★ இந்த ஐந்து உருக்களுடனும் தொடர்புடைய 20 ஆம், 21 ஆம் வினாக்களுக்கு விடை தருக.






20. மேலுள்ள 5 உருக்களில்  இவ்வுரு அதிக தடவைகள் இடம்பெற்றுள்ள கூட்டினைத் தெரிவு செய்க.

1)  2) 

3) 

21. △ இவ்வுருக்களின் எண்ணிக்கையிலிருந்து ⬠ இவ்வுருக்களின் எண்ணிக்கையைக் கழிக்கும்போது ○ இவ்வுருக்களின் எண்ணிக்கை விடையாக வரும் கூடு எது?

1)  2) 

3) 

# கிரிபத்கொடை பொலிஸ் சிறைக்கூடத்தில் இளைஞன் பலி

(கொழும்பு)

கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரொருவர் சிறைக்கூட்த்திலேயே நேற்று முன்தினம் இரவு உயிரிழந்த சம்பவமொன்றை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த சந்தேக நபர் மாரடைப்பு காரணமாகவே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

போதைப் பொருளை வைத்திருந்தார் என்று குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபர் மாரடைப்பால் பாதிக்கப்பட்ட நிலையில் பொலிஸாரால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே அவர் உயிரிழந்த தாக கிரிபத்கொடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறினார். சந்தேக நபரது சடலம் உரிய பிரதேச பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளது. (6)

# இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கூடுதல் விமானங்களை இயக்க திட்டம்

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கூடுதல் விமானங்களை இயக்க ஜெட் ஏர்வேஸ் விமான சேவை திட்டமிட்டுள்ளதாகவும் இதற்காக அந்நிறுவனம் மத்திய அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறதென தெரிவிக்கப்படுகிறது.

ஜெட் ஏர்வேஸ் விமான சேவையானது தற்போது சென்னையில் இருந்து கொழும்புக்கு தினசரி ஒரு விமான சேவையை நடத்தி வருகிறது.

இந்நிலையில் டில்லி , மும்பை உட்பட நாட்டின் பல நகரங்களில் இருந்து கொழும்புக்கு கூடுதல் விமானங்களை இயக்க முடிவெடுத்துள்ளது. இதற்கு மத்திய அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

கொழும்புக்கு கூடுதல் விமானங்களை இயக்க 4 மாதங்களுக்கு முன்பு மத்திய அரசிடம் அனுமதிகோரி விண்ணப்பிக்கப்பட்டது. ஆனால் இதுவரை அனுமதி அளிக்கப்படவில்லை. அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறோம் என்று ஜெட் ஏர்வேஸ் விமான சேவை நிறுவனத்தார் தெரிவித்தனர். (6)

# சுகாதார அமைச்சுக்குரிய சில அதிகாரங்கள் மாகாண அமைச்சிடம் கையளிப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்குள்ள அதிகாரங்களில் சில மாகாண சுகாதார அமைச்சுக்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மாகாண அமைச்சர்களிடம் மேற்படி அதிகாரங்களைக் கையளித்தார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் எந்தவொரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சரும் தமக்கான அதிகாரங்களை மாகாண அமைச்சர்களுக்குக் கையளித்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சுகாதாரத்துறை நடவடிக்கைகளை முறையாகவும் விரைவாகவும் முன்னெடுக்கும் நோக்கிலேயே இத்தகைய தீர்மானத்தை அமைச்சர் மைத்திரிபால சிறி சேன மேற்கொண்டுள்ளார்.

குறிப்பாக மத்திய அரசின் நிர்வாகத்திலுள்ள வைத்தியசாலைகளின் கண்காணிப்பு மாகாண மட்ட வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடுகள் ஏற்படுமேயானால் மத்திய அரசின் மருந்துப் பொருட்கள் விநியோகப் பிரிவுடன் பேச்சுவார்த்தை நடத்தி மருந்துகளைப் பெற்றுக் கொள்வது ஆகிய அதிகாரங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. (6)

# உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக்க நடவடிக்கை

## அமைச்சர் வீரப்பமொய்லி தெரிவிப்பு

(சென்னை)

உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக அறிவிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்கு மொழியாக அறிவிக்க மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் இது தொடர்பாக தமிழக அரசு விடுத்த வேண்டு கோளை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் இந்த விடயத்தில் நீதித் துறை தான் இறுதி முடிவை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியா முழுவதும் சுமார் 3 கோடி வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும் நீதிபதி பணியிடங்கள் அதிகளவில் காலியாக இருப்பதே இதற்குக் காரணம் என்று அவர் மேலும் கூறினார். (6)

# புதிய அதிபர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டம் ஆரம்பம்

அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து அண்மையில் மேல் மாகாணப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட புதிய அதிபர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண கல்வியமைச்சு , மேல் மாகாண கல்வித்திணைக்களத்துடன் இணைந்து பயிற்சி வழங்கும் திட்டத்தை கடந்த புதன் கிழமை ஆரம்பமானது. இதன் முதல் கட்ட மாக ஒரு தொகுதி அதிபர்களுக்கு கடந்த புதன் ,வியாழன் ,வெள்ளிக்கிழமை ஆகிய மூன்று தினங்களாக ஹங்வெல்லயில் அமைந்துள்ள சீத்தாவக்க கல்வி வள நிலை யத்தில் வதிவிடப்பயிற்சி வழங்கப்பட்டது. நீர் கொழும்பு ,கம்பஹா ,மினுவாங்கொடை ஆகிய கல்வி வலயங்களை சேர்ந்த 105 புதிய அதிபர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கு பற்றினர். மேல் மாகாண முதல மைச்சரின் செயலாளர் திருமதி ஜெயந்தி விஜேய துங்க , மேலதிக செயலாளர் எஸ். யு.விஜேய ரத்ன மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் ஹேமச் சந்திர உட்பட கல்வியியலாளர்கள் பலர் கலந்துகொண்டு அதிபர்களுக்கு பயிற்சிகளை வழங்கினர். மேல் மாகாணத்தின் புதிதாக நியமிக்கப் பட்டுள்ள ஏனைய அதிபர்களுக்கு கட்டம் கட்டமாக பயிற்சி வழங்கப்படவுள்ளதாக மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் அங்கு தெரிவித்தார். (6)

# 06.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 1044-புனித ரோமப் பேரரசின் மூன்றாம் ஹென்றி ஹங்கேரி மீது படையெடுத்தான்.
- 1189- முதலாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1483- மூன்றாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.
- 1484-போர்த்துக்கீச மாலுமி டியாகோ காவோ கொங்கோ ஆற்றின் வாயிலைக் கண்டான்.
- 1535- சேர் தோமஸ் மோர் நாட்டுத் துரோகத்துக்காக இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியினால் தூக்கிலிடப்பட்டார்.
- 1560-ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் எடின்பரோ ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.
- 1785- டொலர் ஐக்கிய அமெரிக்காவின் நாணய அலகாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1854- ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் முதலாவது மாநாடு மிச்சிகனில் நடைபெற்றது.
- 1892- தாதாபாய் நௌரோஜி பிரித்தானியப் நாடாளுமன்றத்தின் முதலாவது இந்தியப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1893-அயோவாவின் பொமெரோய் நகரில் நிகழ்ந்த சூறாவளியினால் 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 1908-ரொபேர்ட் பியரி ஆர்க்டிக்குக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தில் அவர் வட முனையை அடைந்தார்.
- 1939-ஜெர்மனியில் இருந்த கடைசி யூத தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.
- 1944-கனெக்டிகட்டில் கலைக்கூத்து அரங்கில் இடம்பெற்ற பெரும் தீயில் சிக்கிய 168 பேர் கொல்லப்பட்டனர்.
- 1947-சோவியத் ஒன்றியம் ஏகே-47 துப்பாக்கிகளை தயாரிக்க ஆரம்பித்தது.
- 1956-சிங்களம் இலங்கையின் அதிகாரபூர்வ மொழியானது.
- 1962-இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவைக் கொலை செய்த குற்றத்திற்காக சோமாராம தேரர் என்ற பௌத்த துறவி தூக்கிலிட்ப்பட்டார்.
- 1964-மலாவி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1966-மலாவி குடியரசாகியது.
- 1967-நைஜீரியப் படையினர் பயாஃப்ராவினுள் நுழைந்து போரை ஆரம்பித்தனர்.
- 1975-கொமெரோஸ் பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1988-வட கடலில் எண்ணெய் அகழ்வு நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 167 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 2005-லண்டன் நகரம் 2012 ஆம் ஆண்டின் ஒலிம்பிக் விளையாட்டுகளை நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2006- 44 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தோ-சீனப் போரின் போது மூடப்பட்ட சிக்கிமையும் திபெத்தையும் இணைக்கும் நதுலா பாலம் மீண்டும் திறக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1832-முதலாம் மாக்சிமிலியன் மெக்சிக்கோவின் மன்னர் (இ.1864)
- 1870-பரிதிமாற் கலைஞர் தமிழறிஞர் (இ.1903)
- 1946-ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் ஐக்கிய அமெரிக்காவின் 43 ஆவது ஜனாதிபதி.
- 1946-சில்வெஸ்ரர் ஸ்ரலோன் அமெரிக்கத் திரைப்பட நடிகர்.
- 1980-பாவ் கசோல் ஸ்பானிய கூடைப்பந்து ஆட்டக்காரர்.

### இறப்புகள்

- 1893-மாப்பசான் பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1850)
- 1991-என்.ஆர்.சின்னராசா ஈழத்தின் தவில் மேதை (பி.1934).
- 1991-கோவை மகேசன் ஈழத்து எழுத்தாளர் பத்திரிகையாளர் (பி.1938)
- 2002-திருபாய் அம்பானி இந்தியத் தொழிலதிபர் (பி.1932)
- 2005-கிளோட் சைமன் நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1913)

**1885-பிரெஞ்சு வேதியியலாளர் லூயி பாஸ்டர் தான் கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை விசர்நாய் ஒன்றினால் கடிபட்ட 9 வயது ஜோசப் மெயிஸ்டர் என்ற சிறுவனில் வெற்றிகரமாகச் சோதனை செய்தார்.**



# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

தரம்-13 | முன்னோடிப் பரீட்சை | ஆனி 2010

### இரசாயனவியல்-II
### பகுதி B

அகில வாயு மாறிலி, R=8.314JK $mol^{-1}$, அவகாதரோ மாறிலி, $N_A = 6.022 \times 10^{23} mol^{-1}$

**கட்டுரை**

**இரு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**(ஒவ்வொரு வினாவின் விடைக்கு 15 புள்ளிகள் வழங்கப்படும்)**

5. (a) (i) 1965 இல் முதன்முதலில் சந்திரனில் காலடி வைத்த மனிதன் பயன்படுத்திய Apollo- ll விண்கலத்தை இயக்கும் இயந்திரத்திற்கு தேவையான சக்தி பின்வரும் சமன்பாட்டிற்கு அமைய பெறப்பட்டது.

$$4CH_3NHNH_2(l) + 5N_2O_4(l) \longrightarrow 4CO_2(g) + 12H_2O(l) + 9N_2(g)$$

இத்தாக்கத்தில் திரவத் தாக்கிகள் இரண்டும் தானாகவே எளிதில் தீப்பற்றக் கூடியன. $CH_3NHNH_2(l)$ $N_2O_4(l)$, $CO_2(g)$, $H_2O(l)$ ஆகியவற்றின் தோன்றல் வெப்பவுள்ளுறைகள் முறையே +53,-20 , -393,-286kjmol-[1]எனின் மேற்படி தாக்கத்திற்கான வெப்பவுள்ளுறை மாற்றத்தைக் காண்க.

(ii) நியம நிபந்தனையில் 0.5 mol $dm^{-3}$ செறிவுடைய $Ca(OH)_2$ கரைசலின் $50.0Cm^3$ இனுள் $0.50moldm^{-3}$ $H_2C_2O_4(aq)$ (oxalic acid) கரைசலின் $50.0Cm^3$ இனை இட்டுக் கலக்கிய போது 3.0kj வெப்பம் வெளியிடப்பட்டது.

நியம நிபந்தனையில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமோர் பரிசோதனையில் $0.5moldm^{-3}$ $CaCl_2$கரைசலின $50Cm^3$ இற்கு 0.5 $moldm^{-3}$ $Na_2C_2O_4$ கரைசலின $50Cm^3$ சேர்த்துக் கலக்கியபோது 500J வெப்பம் வெளியிடப்பட்டது.

$$H^+(aq) + OH^-(aq) \longrightarrow H_2O(l) \quad ; \quad \Delta H^\ominus = -57 \text{ kJ mol}^{-1}$$

(I) மூல் $Ca(OH)_2(aq)$ ஆனது ஒட்சாலிக் அமிலத்தால் முற்றாக நடு நிலையாக் கப்படும் போது ஏற்படும் வெப்பவுள்ளுறை மாற்றத்தைக் காண்க.

(II) $CaC_2O_4(s)$ இன் நியம வீழ்படிவதால் வெப்பவுள்ளுறையைக் காண்க.

(III) ஒட்சாலிக் அமிலத்தின் அயனாக்க (கூட்டற் பிரிகை) வெப்பவுள்ளுயைக் காண்க.

(iii) இரும்பின் கனிமங்களில் இருந்து தாழ்த்தல் முறையினூடாக இரும்பு பிரித் தெடுக்கப்படும். இங்கு CO (g) பிரதானமான தாழ்த்தும் கருவியாகச் செயற்படும். இதனுடன் தொடர்பான சில தாக்கங்கள் வருமாறு:

$$Fe_2O_3(s) + 3CO(g) \longrightarrow 2Fe(s) + 3CO_2(g) \quad ; \quad \Delta H^\ominus = -28 \text{ kJ}$$

$$3Fe_2O_3(s) + CO(g) \longrightarrow 2Fe_3O_4(s) + CO_2(g) \quad ; \quad \Delta H^\ominus = -59 \text{ kJ}$$

$$Fe_3O_4(s) + CO(g) \longrightarrow 3FeO(s) + CO_2(g) \quad ; \quad \Delta H^\ominus = +38 \text{ kJ}$$

மேற்படித் தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் தாக்கத்திற்கான வெப்பவுள ளுறை மாற்றத்தைக் காண்க.

$$FeO(s) + CO(g) \longrightarrow Fe(s) + CO_2(g)$$

*(8.5 புள்ளிகள்)*

(b) 27°C இல் பின்வரும் சமநிலைத் தாக்கங்கள் சுண்ணாம்புக்கல் காணப்படும் பிரதேசங்களில் மழையின் போது நடைபெறும். 27°C இல் இவற்றிற்கான சமநிலை மாறிலிகள் KCகளின் பெறுமானங்களும் இத்துடன் தரப்பட்டுள்ளது.

$$CO_2(g) \rightleftharpoons CO_2(aq) \quad ; \quad K_c = 0.9$$

$$CO_2(aq) + H_2O(l) + CaCO_3(s) \rightleftharpoons Ca^{2+}(aq) + 2HCO_3^-(aq) \quad ; \quad K_c = 2.4 \times 10^{-6} mol^2 dm^{-6}$$

"மழைநீர் சுண்ணாம்புக்கல் பாறையினூடு செல்லும் போது குகைகளின் மேல் முகட்டில் இருந்து நீர் சுவரின் ஊடு வடிந்து செல்வதால் சுண்ணாம்புப் படிவு காரணமாக குகையின் சுவர்களின் தடிப்பு அதிகரிக்கும்".

(i) மேற்படி கூற்றை இலட்சற்லியேயின் தத்துவத்தைப் பயன்படுத்தி விளக்குக.

(ii) வளிமண்டல அமுக்கம் $1.0 \times 10^5 Nm^{-2}$இல் தூய $Co_2$ இனால் நிரம்பல் அடைந்த கரைசலில் கரைந்த $Co_2$ உடன் வளிமண்டலத்தில் காணப்படும் 1% $Co_2$ சமநிலையில் காணப்படும். கரைந்த $Co_2$ இன் செறிவைக் காண்க.

(iii) (I)மேலே தரப்பட்ட இரண்டாவது சமநிலைத் தாக்கத்தின் சமநிலைமாறி லிக்கான கோவையொன்றை எழுதுக.

(II) மழைநீர் சுண்ணாம்புப் பாறையின் ஊடகச் செல்லும் போது உருவாகும் $Ca(HCO_3)_2(aq)$ இன் உயர்பெறுமானத்தை மதிப்பிடுக.

*(6.5 புள்ளிகள்)*

6. (a) அப்பிள் பழச்சாறு ஒன்றின் PH, 3.5 ஆகும். இதன் $25.0Cm^3$ பினோத்தலின் காட்டியைப் பயன்படுத்தி 0.10 $moldm^{-3}$ NaOH கொண்டு நியமிக்கப் பட்ட போது அளவி வாசிப்பு $27.5Cm^3$ ஆகக் காணப்பட்டது. அப்பிள் பழச்சாறு ஓர்மூல அமிலம் HAp ஐக் கொண்டுள்ளது எனக் கருதுக.

(i) இவ் அப்பிள்ப் பழச்சாற்றில் காணப்படும் ஐதரசன் அயன் செறிவைக் காண்க.

(ii) பழச்சாற்றில் காணப்படும் அமிலம் HApஇன் செறிவைக் காண்க.

(iii)மேற்படி அமிலத்தின் கூட்டற்பிரிகை மாறிலி $K_a$ ஐக் காண்க.

(iv)அப்பிள்ப் பழச்சாற்றின் $100.0Cm^3$ இற்கு $0.5moldm^3$ NaOH இன் $11.0Cm^3$ சேர்க்கும் போது பெறப்படும் விளைவுக் கரைசலின் pH ஐக் காண்க.

(v) மேற்படி மென் அமிலம் HAp இன் அயனாக்கமாறிலி $K_a$இற்கும

அதன் இணை மூலம் Apஇன் அயனாக்க மாறிலி $K_b$ இற்கும் இடையேயான தொடர்பைப் பெறுக.

(vi) நீரின் அயன் பெருக்கம் $K_w = 1.0 \times 10^{-14} mol^2 dm^{-6}$ ஆயின் Ap இன் $K_b$ பெறுமானத்தைக் காண்க.

*(10.0 புள்ளிகள்)*

(b) புரோமின் ($Br_2$) ஆனது நீரும் நீருடன் கலக்கும் இயல்பற்ற சேதனக் கரைப பான் A யுடனும் தாக்கு பொருட் போத்தலில் இட்டு நன்கு குலுக்கிய பின்னர் சமநிலை அடையவிடப்பட்டது.

சமநிலையில் நீர்ப்படையின் $10.00Cm^3$குழாயின் உதவியுடன் வேறாக்கப்பட்டு கரைசலின் கபில நிறம் நீங்கும் வரை $So_2$வாயு மிகையாகச் செலுத்தப்பட்டது. மிகை $So_2$ கரைசலை கொதிக்க வைப்பதன் மூலம் வெளியேற்றப்பட்டது. அதன்பின் கரைசலுக்கு மெதையில் செம்மஞ்சள்க் காட்டி இரு துளிகள் இட்டு 0.01 $moldm^{-3}$ NaOH இனால் நியமிக்கப்பட்டது. முடிவுப் புள்ளியில் அளவி வாசிப்பு $16.70Cm^3$ ஆகக் காணப்பட்டது.

சேதனப்படை A யின் $20.00Cm^3$வேறாக்கப்பட்டு மிகையான நீர் $So_2$சேர்த்து சேத னப்படையின் கபில நிறம் அற்று போன பின்னர் மேற்குறிப்பிட்டது போல் மிகை $So_2$ அகற்றப்பட்டதுடன் 0.05 $moldm^{-3}$ NaOH உடன் நியமிக்கப்பட்டது. இதன போது முடிவுப் புள்ளியில் அளவி வாசிப்பு $30.00Cm^3$ ஆகக் காணப்பட்டது.

(i) நீர்மய $So_2$ இற்குமBr$_2$ இற்கும் இடையே நடைபெறும் தாக்கத்திற்கான சமன்படுத்திய சமன்பாட்டை எழுதுக.

(ii) சமநிலையில்
நீர்படையில்
சேதனப்படையில்
காணப்படும் $Br_2$இன் செறிவினை $moldm^{-3}$ இல் காண்க.

(iii) சேதனக் கரைப்பான் A யிற்கும் நீருக்கும் இடையே $Br_2$இன் பங்கீட்டுக் குணகம் $K_d$ இற்கான கோவையை எழுதுக.

(iv) $K_d$ இன் பெறுமானத்தைக் காண்க.

*(5.0 புள்ளிகள்)*

7. (a)கிரபைற் பசையால் மெல்லிய படை ஒன்றை பிளாத்திக்கு பொருள் ஒன்றின் மீது உருவாக்கி $Cr_2(SO_4)_3$நீர்க்கரைசலினுள் அதனை வைத்து மின்பகுப்பதன் மூலம் பிளாஸ்த்திக்குப் பொருளின் மேல் குறோமியத்தை முலாமிட முடியும்.

(i) மின்முலாமிடலின் ஆரம்பத்தில் பிளாத்திக்குப் பொருள் மீது கிரபைற்றுப் படையை உருவாக்குவதற்கான காரணம் யாது?

(ii) மின்முலாமிடும் கலத்தில் பயன்படுத்தப்படும் மற்றைய மின்வாயில் உள்ள பதார்த்தம் எது?

(iii) மின்முலாமிடலுக்கான கலத்தின் பௌதிக அமைப்பு வரைபடத்தை வரைந்து முற்றாகப் பெயரிடுக.

(iv) 0.05A மின்னோட்டம் கலத்தினூடு 300sஇற்கு செலுத்தப்படின் பளாத்திக்குப் பொருளின் திணிவு அதிகரிப்பு யாது? (IF = 96500C, Cr=52)

(v) இதே முறையில் குறோமியத்திற்குப் பதிலாக Zn ஐப் பிளாத்திக்குப் பாத்திரத்தின் மீது முலாமிட முடியுமா? உமது விடைக்கான காரணத்தைக் தருக.

(vi) (I) பிறைன் கரைசலை சடத்துவ மின்வாய் கொண்டு மின்பகுக்கும் போது மின்வாய்கள் ஒவ்வொன்றிலும் நடைபெறும் மின்வாய்த் தாக்கங்களின் சமன்பாடுகளை எழுதுக.

(II) மேற்படி மின்பகுப்பில் நடைபெறும் மொத்தக் கலத்தாக்கத்தைத் தருக.

(III) மின்பகுப்பின் போது விடுவிக்கப்படும் $Cl_2$ வாயுவின் திணிவிற்கும் உருவாகும் NaOH இன் திணிவிற்கும் இடையேயான திணிவு விகிதத்தைக் காண்க.

(Na=23,O=16,H=1,Cl=35.5)

*(7.0 புள்ளிகள்)*

(b) 700°Cஇல் NO(g) உம் $H_2(g)$ உம் பின்வருமாறு தாக்கம் புரியும்.

$$2NO(g) + 2H_2(g) \text{ஆ} N_2(g) + 2H_2O(l)$$

மேற்படி தாக்கத்தின் இரசாயனத்தாக்க இயக்கவியலைக் கற்கும் பொருட்டு செய்யப்பட்ட பரிசோதனைப் பெறுபேறுகள் கீழே அட்டவணையில் தரப்பட டுள்ளது.

| பரிசோதனை இலக்கம் | NO(g) இன் ஆரம்ப செறிவு / mol $dm^{-3}$ | $H_2(g)$ இன் ஆரம்பச் செறிவு / mol $dm^{-3}$ | ஆரம்பத்தாக்க வீதம் / mol $dm^{-3}$ |
|---|---|---|---|
| 1 | 0.0020 | 0.0120 | 0.0033 |
| 2 | 0.0040 | 0.0120 | 0.0130 |
| 3 | 0.0060 | 0.0120 | 0.0300 |
| 4 | 0.0120 | 0.0020 | 0.0200 |
| 5 | 0.0120 | 0.0040 | 0.0400 |
| 6 | 0.0120 | 0.0060 | 0.0600 |

(i) இயலுமானவரை மேலே தரப்பட்டஎல்லாத் தரவுகளையும் பயன்படுத்தி
(I) NO(g)

(II) $H_2(g)$
என்பவை சார்பான தாக்கவரிசைகளைத் துணிக.

(ii) தாக்கவீத மாறிலி K ஐ உள்ளடக்கிய தாக்கவீதச் சமன்பாட்டை எழுதுக

(iii) தாககவீத் மாறிலி K இன் பெறுமானத்தை துணிக.

(iv) NO(g), $H_2(g)$ என்பவற்றின் ஆரம்பச் செறிவுகள் முறையே 0.005 mol $dm^{-3}$, 0.010 mol $dm^{-3}$ ஆகவுள்ள போது தாக்கத்தின் ஆரம்பத் தாக்க வீதத்தைத் துணிக.

(v)பின்வரும் ஒவ்வொன்றையும் அதிகரிக்கும் போது ஆரம்பத் தாக்கத்திற்கு என்ன நடைபெறும் எனச் சுருக்கமாக விளக்குக.

(I) அமுக்கம்

(II) வெப்பநிலை

(vi) NO(g)இற்கும் $H_2(g)$ இற்கும் இடையே நடைபெறும் தாக்கம் புற வெப் பத்தற்குரியதா? அல்லது அகவெப்பத்திற்குரியதா? காரணத்தை முன்வைக்க.

***(8.0 புள்ளிகள்)***

## பகுதி C - கட்டுரை

**இரு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
**(ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.)**

8.(a) (i) இரண்டு ஒரு பகுதியங்கள் $HOCH_2CH_2OH$, $HO_2C-C_6H_4-COOH$ ஆகியவற்றில் இருந்து உருவாக்கப்படும் தெரிலீன் **(Terylene)** ஒரு பொலி எசுத்தர் **(Polyester)** ஆகும்.
(I) **Terylene** இன் மீளவரும் அலகின் கட்டமைப்பை வரைக.
(II) தெரிலீனின் உற்பத்தியின் போது நடைபெறும் பல்பகுதியாக்கத்தின் வகையைத் தருக.

சேர்வை A, $C_4H_{10}O_2$சோடிய உலோகத்துடன் தாக்கம் புரியும் ஆனால் NaOH (aq) இல் கரையாது. சூடான அமில $Na_2Cr_2O_7(aq)$ உடன் A யை பரிகரிக்கும் போது NaOH (aq) இல் கரையக்கூடிய சேர்வை B ஐக் கொடுக்கும் Ni ஊக்கி முன்னிலையில் Fumaricacid, HO2C - CH = CH- COOH ஐ $H_2$உடன் பரிகரிப்பதன் மூலம் B ஐ உருவாக்க முடியும் சேர்வைகள் Aயும் Bயும் இணைப் பல் பகுதியாக்கல் மூலம் பொலியெசுத்தர் ஒன்று உருவாக்கப்படும்.
(I) சேர்வைகள் Aயையும் Bயையும் அடையாளங்காண்க.
(II) மேற்படி எல்லா இரசாயனத்தாக்கங்களைபும் சுருக்கமாக விளக்குக.
(III) Aயும் Bயும் இணைந்து உருவாகும் பல்பகுதியத்தின் மீளவரும் அலகு ஒன்றின் கட்டமைப்புச் சூத்திரத்தை வரைக.
(iv)தெரிலீனினதும் பொலி (A-B) இனதும் ஒரே நீளச் சங்கிலியைக் கொண்ட பல்பகுதியங்களைக் கருதும் போது எதன் உருகுநிலை உயர்வாகக் காணப்படும்? காரணத்தை முன்வைக்க.

***(6.0 புள்ளிகள்)***

(b) Chromite ($FeO.Cr_2O_3$) மாதிரியொன்று பின்வரும் பரிகரிப்புக்கு உட்படுத் தப்பட்டது. 1.0g திணிவுடைய மாதிரி Sodium peroxideஉடன் சேர்த்து உருவாக்கப்பட்டு அது கொதிக்கும் நீரினூடு செலுத்தப்பட்டு வடித்தெடுக்கப் பட்டது. கரையாத திண்ம மீதியும் நன்கு கழுவப்பட்டு அந்நீரும் வடிதிரவத் துடன் சேர்க்கப்பட்டது. பின் அமிலப்படுத்திய வடிதிரவத்துள் 90ml,0.1$moldm^{-3}$ $FeSO_4$கரைசல் இடப்பட்டு அக்கரைசலை 0.05 $moldm^{-3}$ $K_2Cr_2O_7$ கரைச லுடன்நியமிப்புச் செய்தபோது அளவி வாசிப்புகளின வித்தியாசம் 21.0ml ஆகும்.

கரையாத திண்மமீதி பின்னர் உருக்கப்பட்டு அமிலத்திற் கரைக்கப்பட்டு தாழ்த்தப்பட்ட பின்னர் இக்கரைசலை ஒட்சியேற்றுவதற்கு 0.05 $moldm^{-3}$ $K_2Cr_2O_7$ கரைசலின் 20.0ml தேவைப்பட்டது.
(i) இங்கு நடைபெறும் எல்லா ஒட்சியேற்ற தாழ்த்தல் தாக்கங்களையும் தருக.
(ii)மாதிரியில் இரும்பினதும் குரோமியத்தினதும் திணிவுச்சதவீதங்களைக் கணிக்க. (Fe=56, Cr=52)
(iii)நியமிப்பில் அமிலப்படுத்தலின் போது $H_3PO_4(aq)$ அமிலம் சேர்க்கப்படு கிறது. இதற்கான காரணங்களைத் தருக.
(iv)இந்நியமிப்பில் மிகவும் பொருத்தமான காட்டி எது?

***(7.0 புள்ளிகள்)***

(C) அண்மையில் ஐஸ்லாந்தின் எரிமலை குமுறலால் பல விமான சேவைகள் பாதிப்படைந்தன. மேலும் இவ் எரிமலை குமுறலால் ஏற்படுத்தக்க சூழல் அச்சுறுத்தல்களை எதிர்வு கூறுக.

(2.0 புள்ளிகள்)

9. (a) பின்வரும் சேர்வைகளின் வெப்பப்பிரிகைகளுக்கான சமப்படுத்திய சமன்பாடுகளைத் தருக. (வெப்பப்பரிகை அடையாதெனில் அதனைத் தெளிவாகக்குறிப்பிடுக)


(i) $Ca(NO_3)_2$ (ii) $Cs_2CO_3$
(ii) $(NH_4)_2CrO_4$ (v) $KClO_3$
(iii) $NH_4NO_3$ (vi) $AgNO_3$

***(3.0 புள்ளிகள்)***

Y=Na,K,S,Cl,Br எனும் மூலகங்களின் ஐதரைட்டுக்களைக் கருதி கீழே தரப் பட்டமின்னெதிர்த்தன்மைப் பெறுமானங்களின் உதவியுடன் இவற்றின் நீர்க்கரைசல்களின் அமில மூல இயல்புகளை ஆராய்க. ***(2.0 புள்ளிகள்)***

| மூலகம் | H | Na | K | Cl | Br | S |
|---|---|---|---|---|---|---|
| மின்னெதிர்த்தன்மை | 2.1 | 0.9 | 0.8 | 3.0 | 2.8 | 2.5 |

(C)மூன்று உலோக கற்றயன்களின் கரைசல் A தொடர்பான பின்வரும் பாய்ச்சல்க் கோட்டு வரைபை அவதானிக்க.




(i) கரைசல் Aயில் உள்ள கற்றயன்கள் மூன்றையும் இனங்காண்க.

(ii) சேர்வைகள் B, C, E, F என்பவற்றின் சூத்திரங்களைத் தருக?

(iii) கரைசல் Fல் அமையும் உலோக கற்றயனின் இலத்திரன் நிலையமைப்பை $1s^2$ $2s^2$..... எனும் வழமையான முறையில் எழுதுக.

(iV) கரைசல் F இல் உள்ள உலோகம் M இன் கற்றயன் பின்வரும் சிக் கலயன்களைத் தோற்றுவிக்கிறது.
$[MCl_4]^{2-}$, $[M(CN)_4]^{2-}$ ,$[M(H_2O)_6]^{2+}$இம்மூன்று சிக்கலயன்களின் நிறங் களையும் வடிவங்களையும் தனித்தனியே தருக.

(V) M இனது சேர்வைகள் நிறமுடையனவாய் அமைவதற்கான காரணத்தைத் தருக.

(Vi) கரைசல் D யிலுள்ள கற்றயன் சுவாலைச் சோதனையில் அவதான மொன்றை வெளிப்படுத்துவதன் காரணத்தைச் சுருக்கமாக விளக்குக.

(Vii) M இனதும் M இன் ஒட்சைட்டினதும் பயன்பாடுகள் ஒவ்வொன்றைத் தருக.

***(6.0 புள்ளிகள்)***

$ClO_2^-$,$ClO_3^-$ ஆகிய அயன்களுக்குப் பொருத்தமான பரிவுக்கட்டமைப்புகளை வரைவதுடன் இதிலிருந்து $HClO_2$,$HClO_3$ ஆகிய அமிலங்களில் எது அமிலவலிமை கூடியது என உய்த்தறிக.

***(4.0 புள்ளிகள்)***

10. (a)தாவரப்பசளைகள் பெரும்பாலும் N ஐப் பிரதானமாய் கொண்டிருக்கின்றன. ஓர் தாவரப்பசளை மாதிரி யூரியாவையும் அமோனியம் சல்பேற்றையும் மாத்திரம் கொண்டுள்ளது. இம் மாதிரியின் 0.192g திணிவானது 0.1 $moldm^{-3}$, 70ml Naoh(aq) உடன் கொதிக்க வைத்து தாக்கமுற விடப்பட்டது. வெளியேறிய அமோனியாவானது 0.1 $moldm^{-3}$, 100ml HCl (aq)ஆல் முற்றாக உறிஞ்சப்பட்டு பெற்ற கரைசலானது 200mlற்கு கனவளவு குடுவையிலிட்டு ஐதாக்கப்பட்டு அக்கரைசலின் 10ml ஐ மெதையில செம்மஞ்சள் காட்டி முன்னிலையில் 0.01 $moldm^{-3}$ NAOH(aq) ஆல் நியமிப்புச் செய்தபோது அளவயின் வாசிப்பு 30.0mlஆகக் காணப்பட்டது.(C=12,H=1, O-16,N=14,S=32)

(i)மேலே நடைபெறும் எல்லாத் தாக்கங்களினதும் சமப்படுத்திய சமன்பாடு களைத் தருக.

(ii) மேலே பயன்படுத்தப்பட்ட காட்டியின் நிறமாற்றத்தையும் தருக.

(iii) மேற்படி மாதிரியில் யூரியாவினதும் அமோனியம் சல்பேற்றினதும் திணிவுச் சதவீதங்களைக் காண்க.

***(7.0 புள்ளிகள்)***

(b) இப்பகுதிக்கு விடையளிப்பதற்கு பகுதி Aயில் பக்கம் 12இல் தரப்பட்ட பாய்ச்சல் கோட்டுப்படத்தைப் பயன்படுத்துக.
ஏபர் முறையிலான $NH_3$இன் உற்பத்தியிலும் ஒஸ்வாலற் முறையிலான$HNO_3$ உற்பத்தியிலும் இருந்து $NH_4NO_3$ உற்பத்தியை கருதுக.

1) உபயோகப்படுத்தப்பட்ட தொடங்கு பொருட்களை S,T ஆகிய முக்கோணங் களில் எழுதுக.



(ii) இம்முறைகளில் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகளையும் X,Y,Z ஆகிய கூடுகளில் எழுதுக.

(iii) இம்முறைகள் சம்பந்தப்பட்ட எல்லா நிபந்தனைகளையும் L,M,N ஆகிய நீள் வட்டங்களில் எழுதுக.

(iv) ஒவ்வொரு செயற்பாட்டின் போது பெறப்பட்ட பதார்த்தங்களின் இரசாயனச் சூத்திரங்களைA,B,C,D,E,F,G ஆகிய வட்டங்களில் எழுதுக.

(v) இம்முறைகளில் நடைபெறும் இரசாயனத் தாக்கங்கள் எல்லாவற்றிற்கும் சமப்படுத்திய சமன்பாடுகளை எழுதுக.

***(8.0 புள்ளிகள்)***


உள்ளூராட்சி மன்றங்களின் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (நெல்சிப்) சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பொது நிறுவனப் பிரதிநிதிகள் பங்குபற்றிய திட்ட முன்வரைபு கூட்டத்தில் பொதுமக்களில் ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீஸ்வரன் மற்றும் பொது பிரதிநிதிகள் நிற்பதையும் திட்ட முன்வரைவு பற்றி பொது நிறுவனப் பிரதிநிதிகளில் ஒருவர் விளக்குவதனையும் பிரதிநிதிகள் குழு விவாதத்தில் ஈடுபட்டிருப்பதனையும் 2ஆம் பிரிவு பிரதிநிதிகள் திட்ட பிரதேச வரைபடத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி விவாதிப்பதனையும் படங்களில் காணலாம்.

## பாடசாலைகளின் தரப்படுத்தல் மீளாய்வு செய்யப்படவுள்ளது

### கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள பாடசாலைகளின் தரப்படுத்தல் மீளாய்வு செய்யப்படவுள்ளதாகக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறை புனித தோமஸ் மகளிர் பாடசாலையில் நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்ட போது அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

எதிர்வரும் காலங்களில் மாகாண சபை மற்றும் தேசியப் பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படுமெனக் கல்வி அமைச்சர் கூறியதுடன் நாட்டில் ஆரம்பப் பாடசாலை தரம் 5வரையிலும் , ஆறாம் தரத்துக்கு மேல் கல்வி பயில்வோருக்குஅனைத்து வசதிகளை யும் கொண்ட இரு வகையிலான பாடசாலைகளும் காணப்படவேண்டுமெனவும், தெரிவித்தார்.



குறித்த பாடசாலைகளை அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளினால் நிர்வகிக்க முடியும் எனத் தெரிவித்ததோடு கல்வி ஆலோசனைச் செயற்குழு அடுத்த மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளுக்குள் புதிய தேசிய கல்விக் கொள்கையையும் சட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தும்போது இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். (6)

## 14 பேரை படுகொலை செய்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

(கொழும்பு)

கடந்த 21 ஆண்டுகளாக 14 பேரை படுகொலை செய்த நபர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

51 வயதான குறித்த சந்தேக நபர் எம்பிலிப்பிட்டிய மற்றும் தங்காலைப் பிரதேசங்களில் இந்தப் படுகொலைகளைச் செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

1989 ஆம் ஆண்டு முதல் தங்காலை மற்றும் எம்பிலிப்பிட்டிய பிரதேசங்களில் 13 பேரை படுகொலை செய்து புதைத்துள்ளதாக பொலிஸாரிடம் குறித்த் நபர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய மொதரவான பகுதியைச் சேர்ந்த ஆறு குழந்தைகளின் தந்தை ஒருவரே இவ்வாறான படுகொலைகளைச் செய்துள்ளார்.

14 ஆவது நபரை படுகொலை செய்து புதைத்தன் பின்னர் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் விசாரணை நடத்திய போது ஏனைய 13 கொலைகள் பற்றியும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை காணிப் பிரச்சினை காரணமாக அண்மையில் 22 வயதான நபர் ஒருவரை குறித்த நபர் படுகொலை செய்து வாழைத்தோட்டமொன்றில் புதைத்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

கொலையுண்டவருக்கு இறுதியாக கிடைக்கப் பெற்ற தொலைபேசி அழைப்பு தொடர்பாக விசாரணை நடத்திய போது கொலையாளியை கண்டுபிடிக்க முடிந்ததாக பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர். (6)

## பாராளுமன்றில் இராப்போசனத்திற்கு மட்டும் ரூபா ஒரு இலட்சம் செலவு

(கொழும்பு)

பாராளுமன்ற நாள் ஒன்றில் இரவு போசனத்திற்காக மட்டும் ஒரு இலட்சம் ரூபாவினை செலவிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற அமர்வுகள் இரவுநேரம் வரையில் நீடிக்கப்படுவதனால் இரவுப் போசனத்தையும் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரவு வரையில் பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறுவதனால் சுமார் 650 பணியாளர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இதில் 250 பேர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவுபோசனத்திற்காக மட்டும் ஒரு இலட்ச ரூபா செலவிடப்படுவதுடன், மின்சாரம் மற்றும் நீர் போன்றவற்றுக்காக பெருமளவு பணம் செலவிடப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

## பல்வேறு சமூகக் காரணங்களால் படிப்பை பாதியில் கைவிட்ட மாணவர்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்து முடிந்த போர், சுனாமி மற்றும் பல சமூகக் காரணங்களால் தமது பாடசாலை படிப்பைப் பாதியில் கைவிட்ட ஆயிரக்கணக்கான மாணவர்கள் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

போர் மற்றும் சுனாமி காரணமாக தமது தாய், தந்தையரை இழந்த பல நூற்றுக் கணக்கான பிள்ளைகள், வயது முதிர்ந்த தமது பாட்டன், பாட்டியின் பராமரிப்பில் இருப்பதால், பாடசாலை செல்லும் வசதியை இழந்திருக்கிறார்கள். போரினால் வலது குறைந்த பெற்றோரின் குழந்தைகள், ஆயுதக் குழுக்களின் முன்னாள் உறுப்பினர் களின் குழந்தைகளும் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வெளிநாட்டுக்கு வேலைக்குச் சென்ற பல பெண்களின் பிள்ளைகளும் இவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

சுமார் இருபதினாயிரம் சிறார்கள் இவ்வாறு பாடசாலைப் படிப்பை பாதியில் கைவிட்டிருப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறுகின்ற போதிலும், அரசாங்க நிறுவன அதிகாரிகளின் தகவல்களின் படி கிட்டத்தட்ட 5 ஆயிரம் சிறார்கள் இவ்வாறு பாடசாலைப் படிப்பை கைவிட்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இவ்வாறு பாடசாலைப் படிப்பை பாதியில் கைவிட்டவர்களை மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கவும், அல்லது அவர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்கவும் பல முயற்சிகள் அங்கு மேற்கொள்ளப்படுகின்றன. ஆயினும் அவற்றில் சில குறைபாடுகள் இருப்பதாகவும், அத்தகைய திட்டங்களுக்கு போதிய வளம் இல்லாத நிலை காணப்படுவதாகவும் கூட விமர்சனங்கள் உள்ளன. (6)

## அரசியலமைப்புத் திருத்தங்கள் தற்போதைக்கு மேற்கொள்ளப்படாது

### சிரேஷ்ட அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் தவணைக்காலத்தை நீடிக்கும் முனைப்புக்கள் காலம் தாழ்த்தப்படும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தவணைக்காலத்தை நீடித்தல் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய அரசியலமைப்பு திருத்தங்கள் தற்போதைக்கு மேற்கொள்ளப்படமாட்டாதெனக் குறிப்பிட்டுள்ளார்.

செனட் சபை மற்றும் மக்கள் சபைகளை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளதுடன் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் ஓர் முனைப்பாக செனட்சபை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை அரசியல் சாசனத் திருத்தங்கள் துரித கதியில் மேற்கொள்ளப்படமாட்டாதென அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உறுதியளித்துள்ளதென தெரிய வருகிறது.

மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் செனட் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவித்த குறித்த அமைச்சர் கிராம சபைகளின் ஊடாக கிராம அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

தொகுதி வாரி முறையில் தேர்தலை நடத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதா கவும் ஏற்கனவே தொகுதிகளை நிர்ணயிக் கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

## உயர் கல்வி மாணவர்களுக்கான மஹாபொல புலமைப்பரிசில்

(கொழும்பு)

மஹாபொல புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 11ஆயிரத்து 590 உயர் கல்வி மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன.

மஹாபொல புலமைப்பரிசில் வழங்கும் 29 ஆவது வருட நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிரதமர் டி.எம்.ஜயரட்னவின் தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அமைச்சர்கள் எஸ்.பி.திஸாநாயக்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்ட இந் நிகழ்வில் முதற்கட்டமாக நாடளாவிய ரீதியில் க.பொ. உயர்தரப் பாடசாலையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 24 மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

மஹாபொல புலமைப்பரிசிலாக மாதாந்தம் 2ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வருகிறது. 422 பேருக்குப் புலமைப்பரிசிலை வழங்கும் 1981 ஆம் ஆண்டு அன்றைய உயர்கல்வி அமைச்சர் அதுலத் முதலி இத் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். அதனையடுத்து இவ் வருடம் வரை ஒரு இலட்சத்து 60 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடதக்கது. (6)

A, B, C, D ஆகிய நான்கு நண்பர்கள் தமது சட்டைப்பைகளுள் நிறமாபிள்கள் வைத்திருக்கின்றனர் ஒவ்வொருவரிடமும் மூன்று மாபிள்களே தற்போது உள்ளன.

22. B என்பவர் ஏனைய மூவரிடமும் தலா ஒவ்வொரு மாபிள்களை வாங்கி தனது சட்டைப் பையில் போட்டால், தற்போது அவரிடமுள்ள மாபிள்கள் எத்தனை?
1) 4 மாபிள்கள்
2) 5 மாபிள்கள்
3) 6 மாபிள்கள்

23. ஏனைய மூவரிடமும் தலா ஒவ்வொரு மாபிள் வாங்கிய B யிடம் உள்ள மாபிள்களுக்கும் C யிடம் தற்போது உள்ள மாபிள்களுக்கும் இடையிலான வித்தியாசம் யாது?
1) இரண்டு 2) மூன்று
3) நான்கு

★ ஈட்டி எறிதல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் மூவரும் ஈட்டியினை வீசிய தூரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மாணவர்கள் | வீசிய தூரம் | பெற்ற இடம் |
|---|---|---|
| ஹசீம் | 48.3 மீற்றர் | .......... |
| ரஹீம் | 52.5 மீற்றர் | .......... |
| ஹசன் | 52.7 மீற்றர் | .......... |

24. மூவரில் முதலிடம் பெற்றவர் யார்?
1)ஹசீம் 2) ரஹீம் 3) ஹசன்

25. ஹசீம் முதலாமிடம் பெற வேண்டுமாயின் குறைந்தது இன்னும் எவ்வளவு அதிகமாக எறிந்திருக்க வேண்டும்?
1) 4.6 மீற்றர் 2) 4.5 மீற்றர் 3) 4.4 மீற்றர்

26. பயணம் தொடர்பான பிழையான கூற்றினைத் தெரிவு செய்க.
1) விமானங்கள் எல்லாம் ஆகாயத்திலேயே பயணிக்கும்.
2) புகையிரதம் வீதியால் வளைந்து வளைந்து செல்லும்
3) கப்பல்கள் எப்போதும் வீதியில் பயணிக்காது.

27. விளையாட்டு தொடர்பான மிகச் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
1) விளையாட்டில் தோல்வியடையக் கூடாது.
2) வெற்றியும் தோல்வியும் சமமாக மதிக்கப்பட வேண்டும்
3) வெற்றியே விளையாட்டின் நோக்கமாகும்.

28. ‘துன்பத்தில் நொந்துபோய் இருந்தவனுக்கு மேலும் மேலும் துன்பம் வருதல்’ எனும் கருத்தைத் தரும் தொடரைத் தெரிவு செய்க.
1) பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது.
2) அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
3) மரத்தால் வீழ்ந்தவனை மாடேறி மிதித்தது போல.

சிறியவர்கள் எப்போதும் விளையாட்டுக் குணமுடையவர்களாக இருப்பார்கள் ஆனால் பெரியவர்கள் எப்போதும் கண்டிப்பானவர்களாகவே இருப்பார்கள்.

29. மேலுள்ள கூற்றுக்குப் பொருந்தும் விடையினைத் தெரிவு செய்க
1) பெரியவர்களால் விளையாட முடியாது.
2) சிறியவர்களுக்கு விளையாட மட்டுமே தெரியும்
3) சிறியவர்களைக் கண்டிப்பது பெரியவர்களின் கடமை

ஒரு புத்தகத்தின் ஏழாவது பக்கம் ஒற்றை எண்ணாகும். அதன் பத்தாவது பக்கம் இரட்டை எண்ணாகும்.

30. இவ்விரண்டு பக்கங்களுக்கும் இடையில் உள்ள இரண்டு பக்கங்கள் தொடர்பான சரியான கூற்று எது?
1) இரண்டும் ஒற்றை எண்களாகும்
2) இரண்டும் இரட்டை எண்களாகும்.
3) ஒற்றையெண் ஒன்றும் இரண்டையெண் ஒன்றும் ஆகும்.

31. அப்புத்தகத்தின் இறுதிப்பக்க எண் 30 எனின், புத்தகத்தின் நடுப்பக்க எண்கள் இரண்டும் எவையாக இருக்கும்?
1) 15 உம் 16 உம்
2) 14 உம், 15 உம்
3) 16 உம் 17உம்


*ஒரு காட்டில் ஒரு .......#...... ராஜாவாக இருந்தது. அக்காட்டில் .......✪....... ஒன்றும் .....⌘........ ஒன்றும் வசித்து வந்தன. ஒரு நாள் ராஜாவாகிய .....#........ இடம் அன்றைய உணவிற்காக வர வேண்டிய .....✪............ வராத காரணத்தால் .......#....... கடும் கோபமடைந்தது.*


★ மேலுள்ள கதைப் பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

32. இக்கதையின்படி # இக்குறியீடு இடம்பெற்றுள்ள இடங்களில் வர வேண்டிய மிருகம் எது?
1) புலி
2) யானை
3) சிங்கம்


33. இக்கதையின்படி ✪ ⌘. இக்குறியீடுகள் முறையே இடம்பெற வேண்டிய பிராணிகள் எவை?
1) முயல், நரி
2) நரி, முயல்
3) சிங்கம், முயல்

★ **34 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**





34.  எனும் குறியீடுகளை சொற்களாக எழுதுக.
(..............................................................)

35  இந்த நான்கு குறியீடுகளையும் பயன்படுத்திக் கருத்துள்ள ஒரு சொல் எழுதுக.
(..............................................................)


36. 

அருகேயுள்ள சதுரக் கூட்டை மேலிருந்து கீழாகவும், இடமிருந்து வலமாகவும் கூட்டும்போது கூட்டுத் தொகை 40 வருமாறு கூடுகளைப் பூரணப்படுத்துக.
(..............................................................)

37. 

அருகேயுள்ள வட்டத்தில் ஏதோ ஒரு ஒழுங்கில் எண்கள் இடப்பட்டுள்ளன. எண் இடம்பெறாமல் உள்ள பகுதியினுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.
(..............................................................)

★ **ஒரு பேருந்து A நகரத்திலிருந்து B என்னும் நகரத்தை அடைவதற்குள் 6 தரிப்பிடங்களில் மட்டும் நின்று போனது. அத்தரிப்பிடங்களில் இறங்கிய பயணிகளின் விபரத்தையும் ஏறிய பயணிகளின் விபரத்தையும் கீழ்வரும் உரு காட்டுகிறது.**





38. 3வது தரிப்பிடத்திலிருந்து பேருந்து புறப்படும்போது பேருந்தில் எத்தனை பயணிகள் இருந்தனர்?
(..............................................................)

39. பேருந்து நகரம் B யை அடையும்போது பேருந்தினுள் எத்தனை பயணிகள் இருந்தனர் ?
(..............................................................)

40. பேருந்து நகரம் A யிலிருந்து B யை சென்றடைவதற்குள் தரிப்பிடங்களில் ஏறிய பயணிகளா? இறங்கிய பயணிகளா அதிகம்?
(..............................................................)

# எலும்பில் ஏற்படும் புற்றுநோய்



புற்றுநோய்களை ஆரம்ப கட்டத்திலேயே கண்டுபிடித்துவிட்டால் குணப்படுத்த முடியும் என்பது ஆறுதலான விடயம். ஆரோக்கியமான வாழ்க்கை முறை, சத்தான உணவு, மன அமைதி போன்றவற்றை கூடுமானவரை கடைப்பிடித்தால் புற்றுநோய் வராமல் பெரும்பாலும் பார்த்துக்கொள்ளமுடியும். இனி எலும்பில் ஏற்படும் புற்றுநோய் குறித்து விரிவான அலசல்...

**எலும்புப் புற்றுநோய் என்றால் என்ன?**

எலும்பில் உருவாகி மற்ற இடங்களுக்கு பரவும் புற்றுநோய் முதல் நிலை எலும்புப் புற்றுநோய் (Primary Bone Cancer) என்று அழைக்கப்படுகிறது.

உடலின் வேறு பாகத்தில் புற்று உருவாகி அது எலும்புக்கும் பரவும். இவை இரண்டாம் நிலை எலும்புப் புற்றுநோய் என்கிறோம்.

**பொதுவாக எந்த் எந்த உறுப்புகளில் முதல் நிலை எலும்புப் புற்றுநோய் வரும்?**

கால்முட்டி, கைமணிக்கட்டு,தோள்பட்டை போன்ற இடங்களில் முதல் நிலை எலும்பு புற்று நோய் வருவதற்கு வாய்ப்புகள் அதிகம்.

**எலும்பிலேயே உருவாகும் புற்றுநோயின் அறிகுறிகள் என்ன?**

புற்றுநோய் அறிகுறிகள் அது எந்த இடத்தில் இருக்கிறது என்பதைப் பொறுத்து நோயாளிக்கு நோயாளி மாறுபடும். இருப்பினும் பொதுவாக புற்றுநோய் ஏற்பட்ட பகுதியில் வீக்கம்,வலி, அப்பகுதியை இயல்பாக அசைக்கமுடியாத நிலை, உடல் பலவீனம்,சிலருக்கு எலும்பு முறிவு போன்ற அறிகுறிகள் இருந்தால் கண்டிப்பாக டாக்டரிடம் சென்று ஆலோசிப்பது நல்லது. (தொடரும்)

டாக்டர்
மயில்வாகனன் நடராஜன்


# இதய நோய்களிலிருந்து தப்பிக்க வேண்டுமோ?

எடையைக் குறையுங்கள், உடற்பயிற்சி செய்யுங்கள்,புகைக்காதீர்கள், கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அதிகம் உண்ணாதீர்கள், நார்ச்சத்துள்ள காய்கறிகளை அதிகம் உண்ணுங்கள்,டென்ஷன் அடையாதீர்கள்! என்று தான் எல்லா டாக்டர்களும் ஆலோசனை வழங்குகிறார்கள்.

தற்போது நீங்கள் உணவு உண்ணும் பழக்கத்தை மாற்றிக்கொள்வதன் மூலம் இதய நோய்க்குரிய சூழலிலிருந்து தப்பிக்கலாம் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

தினசரி 200ம் அதற்கு மேலும் விற்றமின் 'ஈ' எடுத்துக் கொள்ளுபவர்ளுக்கு சர்வதேச அளவில் 77 சதவீதம் இதய நோய்கள் வரவாய்ப்பில்லை என்கின்றனர் 2ஆயிரம் ஆண்கள் மற்றும் பெண்களை வைத்து ஆராய்ந்த ஹார்வார்ட் பப்ளிக் ஹெல்த் ஆராய்ச்சியாளர்கள், 400 முதல் 600 யூனிட் விற்றமின் 'ஈ'எடுத்துக்கொள்ளும் பெண்களுக்கு இதய நோய்களே வருவதில்லையாம்.

இளவயதுக்காரர்கள் நோய் எதிர்ப்புச் சக்தியுடன் வாழவும், நடுவயதுக்காரர்கள் இதய நோய் பாயத்தைத் தவிர்க்கவும். விற்றமின் 'ஈ' உள்ள சோளம், பார்லி, ஓட்ஸ், தவிடு நீக்காத அரிசி மா, முளைவிட்ட தானியங்கள், அவாகோடா பழம், கொட்டை உள்ள உணவுகள் (நிலக்கடலை போன்றவை), கீரைகள், சூரியகாந்தி விதை கள், தாவர எண்ணெய் (சூரியகாந்தி எண் ணெய்), கடுகு போன்றவைகளை சேர்த்துக் கொள்ளவேண்டும்.



விற்றமின் பி குரூப்பிலுள்ள போலிக் அமிலம் நல்ல 'இதய நோய் தடுப்பானாக செயல்படுகிறது என்கின்றனர் ஹார்வார்டு யூனிவர்சிட்டி ஆராய்ச்சியாளர்கள். தினசரி 400 மி.கி., போலிக் அமிலம் எடுத்துக் கொள்ளும் நபர்களுக்கு இதய நோய் அபாயம் குறைவு என்கின்றனர். போலிக் அமிலம் அதிகமுள்ள உணவுகள் ஒரேஞ்சு சாறு, கீரைகள்,பச்சைக்காய்கறிகள், முளை கட்டிய பருப்புகள்.

இதயத்தில் கொலஸ்ட்ரோல் தேங்கினால் இரத்த நாளங்கள் சுருங்கும். இதனால், இதயச் செயலிழப்பு ஏற்படும். இதைத் தடுப்பதில் அமிலச் சத்தான 'ஒமேகா 3' வேகம் காட்டுகிறது என்கிறார் வாஷிங்டன் நஷனல் ஹெல்த் சென்டர் ஆராய்ச்சியாளர் சிமோபவுலாஸ். இந்த சத்து மீனில் அதிகம் உள்ளதால் மீன் சாப்பிடுபவர்களுக்கு இதய நோய் பயம் இல்லை என்கின்றனர்.

உடலில் கொழுப்பு சேர விடாமல் ஒமேகா 3 தடுக்கிறது எனவே வாரத்திற்கு இருமுறை மீன்களை உண்ண சிபாரிசு செய்கிறார் சிமோபவுலாஸ். மீன் சாப்பிடாதவர்கள் வால்நட் பருப்பு,சோயா போன்றவைகளை உபயோகியுங்கள் என்கின்றனர். ஒலிவ் ஒயில் இதய நோய் வரும் வாய்ப்பை 53 சதவீதம் குறைக்கிறதாம்.

இதய நோய்கள் அபாயம் இன்றி வாழ தினமும் அரை கப் மாதுளம் பழச்சாறு அருந்துங்கள் என்கின்றனர். இஸ்ரேல் நாட்டிலுள்ள ராம்பம் மருத்துவ ஆராய்ச்சி மைய அறிஞர்கள். மாதுளைச் சாற்றில் பாலி பெனோல்ஸ் என்ற இதயத்திற்கு நன்மை செய்யும் அன்டி அக்ஸிடென்ட் அதிகமாக இருக்கிறதாம்.

டால்டா வெண்ணெய் தேங்காய் எண்ணெய் , சுத்திகரிக்கப்படாத எண்ணெய் போன்றவற்றினால் ஆன உணவு பதார்த்தங்களை உண்ணாதீர்கள். அதிக கொழுப்பு சத்து நிறைந்த பாலாடைக் கட்டி, ஐஸ்கிறீம் போன்றவற்றை குறைவாக உபயோகியுங்கள் என்கின்றனர்.

அதிக உப்புத்திறன் கொண்ட அஜின மோட்டோ, சமையல் சோடா, சமையல் பொடி போன்றவற்றை உபயோகிக்கக் கூடாது. உணவு உண்ணும் மேசையிலிருந்து உப்பு தூவும் குடுவையை எடுத்து விடுங்கள். உப்பிற்கு பதிலாக எலுமிச்சை பூண்டு மற்றும் வெங்காயம் கொண்டு உணவு தயாரிக்கவும்.

எப்பொழுதும் புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளை மட்டுமே உண்ணுங்கள். ஓட்ஸ் கைக்குத்தல் அரிசி போன்றவற்றை உணவில் சேருங்கள். பீன்ஸ், உருளைக் கிழங்கு போன்றவற்றையும் உணவில் அதிகம் சேர்க்கவும். எல்லாவற்றையும் விட அதிக நீர் குடியுங்கள்.

# பற்களையும் கவனிக்கலாமே...

பல்போனால் சொல் போச்சு என்று சொல்வார்கள். உண்மைதான்... வாயில் வரிசையாக பற்கள் இல்லாவிட்டால், சுத்தமான பேச்சு வராது. அதேபோல்,முக அழகை பேணிக் காப்பதிலும் பற்களுக்கு முக்கிய பங்கு உண்டு. பற்கள் விழ ஆரம்பித்து விட்டால் அழகும் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட ஆரம்பித்துவிடும்.



சிலர் வாயைத் திறந்தாலே கப்பென்று ஒரு வாடை அடிக்கும்.அவர்கள் சரியாக பல் துலக்காதது தான் அதற்குக் காரணம். பற்களை முறையாக பராமரிக்காவிட்டால் ,பல் சொத்தையாவதோடு பல நோய்களும் அடிக்கடி வந்து தொல்லை செய்யும்.

அதனால் பற்களை தகுந்த முறையில் பேணிக் காப்பது அவசியமாகிறது. அதற்கு என்ன செய்யலாம்?

குழந்தைப் பருவம் முதலே பற்களை முறையாக சுத்தம் செய்து வர வேண்டும். தினமும் இரண்டு வேளை பல் துலக்கவும், சாப்பிட்டவுடன் வாய் கொப்பளிக்க வேண்டும்.

சிலருக்கு சின்ன வயதிலேயே பற்கள் நீண்டு வளர்வதால் அவர்களது முக அமைப்பே மாறிவிடும்.

குழந்தைப் பருவத் தில் விரல்சூப்புவதே இதற்கு முக்கிய காரணம். பாற்பற்கள் விழுந்து நிரந்தரமான பற்கள் வளரும் பருவத்தில் இந்தப் பழக்கம் தொடரும் போது பற்களின் நேரான வளர்ச்சிக்கு விரல்கள் இடையூறாக இருப்பதால் பற்கள் தங்கள் இயல்பை விட்டு விரல் சூப்பும் நிலைக்கேற்ப நீண்டுவளர ஆரம்பித்து விடுகின்றன. அதனால் 3 முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகள் விரல் சூப்பினால் பரவாயில்லை. அதற்குமேல் அந்தப் பழக்கத்தை அனுமதிக்கக் கூடாது.

நம்மில் பலர் பல் துலக்கும்போது இன்னொரு பெரிய தவறையும் தெரியாமல் செய்து விடுகிறோம்.

அதாவது ,பற்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை பல் ஈறுகளுக்குக் கொடுக்க மறந்து விடுகிறோம்.


ஈறுகளுக்கும், பற்களுக்கும் இடையில் உள்ள சின்ன இடைவெளிகளில் நாம் சாப்பிடும் பொருட்கள் தங்குவதுதான் ஈறு தொர்பான பிரச்சினையை ஏற்படுத்தி விடுகிறது.

குழந்தைப் பருவத்தில் இருந்தே, பல் ஈறுகளுக்கு இடையிலும் சுத்தம் செய்வது எப்படி என்று கற்றுக்கொடுத்தால் பீற்காலத்தில் ஏற்படும் அவதியை தவிர்க்கலாம்.

## Health Care மருத்துவ உலகம்

உங்கள் நலம் உங்கள் கைகளில்

# அல்சரை போக்கும் பச்சை வாழைப்பழம்



◆ வயிற்றில் உள்ள குடல்களில் சுரக்கும் அமிலங்களும் நச்சுப் பொருட்களும் அரிப்பதன் காரணமாக குடல் புண் என்கிற அல்சர் ஏற்படுகிறது. பச்சை வாழைப்பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இந்தப் பாதிப்பில் இருந்து விடுபடலாம். குடல்களில் பழுதுபட்ட மெல்லிய சவ்வுத் தோல்களை விரைவில் வளரச் செய்து புண்ணை ஆற்றிவிடும் சக்தி பச்சை வாழைப் பழத்திற்கு உண்டு.

◆ வெண்டிக்காய் விதையைக் சிறிதளவு பார்லி கஞ்சியில் போட்டு காய்ச்சி மூன்று நாள் வரை சாப்பிட்டு வந்தால் சிறுநீர் கழிக்கும்போது ஏற்படும் எரிச்சல் இல்லாமல் போகும்.

◆ உணவு சாப்பிடுவதற்கு 1/2 மணி நேரத்திற்கு முன்னதாக தினசரி அரை டீஸ்பூன் ஒலிவ் எண்ணெயைச் சாப்பிட்டு வந்தால், இரத்தக் குழாயில் கொழுப்பு படிவதை தடுக்கலாம்.

◆ வாய்ப்புண் உள்ளவர்களுக்கு காரம் ஆகாது. முடிந்தவரை காரத்தைக் குறைத்துச் சாப்பிடுங்கள். தேங்காய்த் துண்டுகளைச் சாப்பிட்டு வந்தால் எளிதில் வாய்ப்பண் ஆறும்.

◆ இரவில் படுக்கப் போகும் முன் வெந்நீரில் சிறிது தேன் கலந்து அந்த நீரில் வாயைக் கொப்பளித்து வந்தால் பற்களுக்கு தொந்தரவு கொடுக்கும் பக்டீரியாக்கள் செத்துப் போகும்.பற்களின் எனாமல் சிதையாமல் பாதுகாக்கப்படும்.

# ஐ.தே.கட்சியின் ஒற்றுமையை நாட்டிற்கு வெளிப்படுத்தவேண்டும்

## கட்சியின் முன்னாள் எம்.பிக்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய சம்மேளனக் கூட்டத்தின் போது கட்சியின் ஒற்றுமையை நாட்டிற்கு வெளிப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பான சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடலின்போது இக் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

கட்சி மறு சீரமைப்புத் தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை வெளியிட்டதன் பின்னர் சம்மேளனக் கூட்டத்தில் மறுசீரமைப்பு ஆலோசனைகளை முன்வைக்க முடியுமென ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் சங்கத் தலைவர் ரஞ்சித் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

பலரது விருப்பத்தின் பேரில் கட்சியாளர்களிடமிருந்து ஏதாவதொரு வேலைத் திட்டத்தைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் சம்மேளனத்திற்கு அனைவரும் ஏகமனதாக தீர்மானத்துடன் செல்ல வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியின் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்துவதற்கு தாம் எதிர்ப்பதாகவும் ஒற்றுமையை நாட்டிற்கு வெளிப்படுத்த வேண்டுமெனவும் அவர் கூறினார். (6)

# இராணுவத்திலிருந்து தப்பியோடிய 16 ஆயிரத்து 11 பேர் பணி நீக்கம்

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய 16 ஆயிரத்து 11 பேரும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலத்தில் இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு மேமாதம் யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் மூன்று கட்டங்களாக பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பொது மன்னிப்பு காலத்தைப் பயன்படுத்தி பெரும் எண்ணிக்கையிலான படையினர் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி முடிவடைந்த மூன்றாவது பொது மன்னிப்பு காலத்தில் மட்டும் 2ஆயிரத்து 62 பேர் உத்தியோகபூர்வமாக சேவையிலிருந்து விலகிக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# புகலிடம் தொடர்பான சட்டங்களை கடுமையாக்குமாறு ஆஸிக்கு ஐ.நா.பரிந்துரை

(கொழும்பு)

இலங்கை அகதிகளுக்கு அவுஸ்திரேலியாவில் புகலிடம் வழங்குவது தொடர்பில் தற்போதுள்ள சட்டங்களை மேலும் கடுமையாக்குமாறு ஐ.நா.சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் பரிந்துரைத்துள்ளது.

இதனை அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக இலங்கையர்களுக்கு அவுஸ்திரேலியாவில் புகலிடம் வழங்குவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைவதாக அவுஸ்திரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சேனக வல்காமபாய குறிப்பிட்டார்.

அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரும் இலங்கையர்கள் தொடர்பாக ஆராய்வதற்கென அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்த கால அவகாசம் இம் மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்த கால அவகாசம் முடிவடைந்ததற்கு முன்னதாக தீர்மானத்தை அறிவிப்பதாக அவுஸ்திரேலியா பிரதமர் கூறியுள்ளார்.

இலங்கை அகதிகளுக்கு அவுஸ்திரேலியாவில் புகலிடம் வழங்குவது தொடர்பாக இதுவரை உறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை என அவுஸ்திரேலியாவுக்கான உயர்ஸ்தானிகர் மேலும் குறிப்பிட்டார். (4)

# பூநகரிக்கான படகுச் சேவை

மணியந்தோட்டம் இறங்குதுறையிலிருந்து பூநகரிக்கு 150 பேர் பயணஞ் செய்யக் கூடிய படகுச் சேவை ஒன்று அடுத்தவாரமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி அறிவித்துள்ளார். (4)

# இத்தாலியில் வேலைவாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி ஏமாற்றிய நபர் கைது

(கொழும்பு)

இத்தாலியில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதாகக் கூறி பொதுமக்களை ஏமாற்றி வந்த வெளிநாட்டவர் ஒருவரை மோசடிகள் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மக்களிடம் நிதிமோசடியில் ஈடுபடும் நோக்கத்தில் செயற்பட்டுள்ள மேற்படி சந்தேக நபர், இலங்கைக்கான விசா அனுமதிப்பத்திரம் முடிவடைந்த நிலையில் தங்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

கொழும்பில் அமைந்துள்ள பிரபல தொடர்மாடியொன்றில் தங்கியுள்ள மேற்படி சந்தேகநபர், தான் தங்கியிருந்தமைக்கான வாடகையினையும் வழங்கியிருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரின் உடல் நிலை மோசமாகியுள்ளதால், சிறைச்சாலை வைத்தியசாலையில் அவரை அனுமதித்துள்ளதாக பொலிஸார் கூறினார். (6)

## இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



www.inuvilkanthan.com

## இருபதாம் திருவிழா

### இணுவைப்பதி உறையும் இனியவன்

இணுவைப்பதியுறையும் இனியவனே முருகா – எம்
இன்னல்கள் தீர்த்திடுவாய் – உன் பக்திப்
பனுவல்கள் பல படித்தோம் பரவசமாகி நின்றோம்
பேரின்பங்கள் கோடி அருள்வாய்
தமிழின் தனித்தலைவா தண்டபாணியே
அமிழ்தினும் இனிதான நம் மொழி
அகிலமெங்கும் ஒலித்திட ஓயாது
உழைப்போர்க்கு உன் அருளைப்
பொழிந்திடுவாய்.

மயிலையூரான்

### அதிகாலை மணியோசை

ராகம் – ஆனந்தபைரவி

பல்லவி

அதிகாலை மணியோசை அதுவேலன் குரலோசை
இது எங்கள் இணுவிலில் எந்நாளும் எழும் ஓசையே
(அதிகாலை)

அனுபல்லவி

புதிதாகத் தினம் கேட்கும் பூபாளம் இசைகூட்டும்
முதியோரும் எழுந்தே உன் முன்றிலில் வருவார்களே
(அதிகாலை)

சரணம்

கதிநீயென் றழுவார்கள் கருணையை வியப்பார்கள்
புதுமைகள் நீசெய்யப் புகழ்ந்தேத்தி மகிழ்வார்களே
விதியென்ன விளையாடும் வேலின் முன் அதுமாளும்
அதிசயம் இதிலென்ன அவன்தானே எல்லாமே
(அதிகாலை)

கோப்பாய் சிவம்

### வேரடியாய் நீயிருந்து எமைக்காப்பாய் ஆறுமுகனே!

தொந்திக்கணபதியின் சோதரனே –உன்
சந்நிதி மடம் வந்தோம் வேலவனே!
அந்திப் பொழுதெல்லாம் உனை நினைந்து – தினம்
அகத்தினிலே உனைவைத்தோம் சண்முகனே!
சிந்தை சிதறடித்துப் போகையிலே – உந்தன்
திருவேலே எமைக்காக்கும் திருமுகனே!
எந்தையவர் வேரடியாய் நீயிருந்து – இங்கு
அனுதினமும் எமைக்காப்பாய் ஆறுமுகனே!

செல்வி அ. ஆகண்யா, இணுவில்

(1709)

# பொன்சேகாவின் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் முடிவு

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டமைக்கு எதிராக ஜெனரல் சரத் பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

இந்நிலையில், குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13,14 ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (6)





தமிழ்-சிங்கள இணையத்தள சேவை ஆரம்ப நிகழ்வு அண்மையில் திருகோணமலை வடமாகாண கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் இணையத்தள சேவையை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி அங்குரார்ப்பணம் செய்துவைப்பதையும், அருகில் வடமாகாண திட்டமிடல் செயலாளர் உமாகாந்தன் நிற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# பிலிப்பைன்ஸில் பஸ் விபத்து; 15 பேர் பலி; 48 பேர் காயம்

(செபு)

பிலிப்பைன்ஸ் நாட்டில் பேருந்து ஒன்று நிலை தடுமாறி சுவற்றில் மோதி விபத்துக்கு உள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர். 48 பேர் காயம் அடைந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் தலைநகர் மணிலாவுக்கு 560 கி.மீ தொலைவில் உள்ளது செபு மாகாணம். இங்கு உள்ள டொலெடோ நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பேருந்து ஒன்று அதிக வேகத்தில் வந்து கொண்டிருந்தது. இந்தப் பேருந்து வளைவு ஒன்றில் வந்து கொண்டிருந்த போது ஏதோ ஓரத்தில் நடந்த சென்றவர்கள் மீது மோதாமல் இருக்க பேருந்தை செலுத்தினார் ஓட்டுநர். இதனால் பேருந்து நிலை தடுமாறி கட்டுப்பாட்டை இழந்தது.

மேலும் பேருந்தில் பிரேக் பிடிக்கவில்லை. இதனால் வீதி ஓரத்தில் இருந்த கட்டடத்தில் சுற்றுச் சுவர் மீது பயங்கரமாக மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் பேருந்தில் இருந்த 15 பேர் உயிரிழந்தனர். 48 பேர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பேருந்தில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தொழிலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்தில் பேருந்தின் ஓட்டுநர் உயிர் தப்பியதாகவும் சிகிச்சைக்குப் பின் அவரிடம் பொலிஸார் விபத்து குறித்து விசாரித்து வருவதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

டொலெடோ நகரில் கடந்த சில வாரங்களில் ஏற்படும் இரண்டாவது மிகப்பெரிய பேருந்து விபத்து இதுவாகும். ஏற்கெனவே கடந்த ஜூன் 13 ஆம் திகதி ஈரானிய மருத்துவக் கல்லூரி மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று மலைப் பள்ளத்தில் விழுந்து விபத்துக்கு உள்ளானதில் 21 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (6-4)

# பாகிஸ்தானில் விமான தாக்குதலில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்

(பெஷாவர்)

பாகிஸ்தானில் ஓரக்ஸாய் மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியில் உள்ள ஓரக்ஸாய் மாகாணத்தில் கடந்த மார்ச் மாதம் முதல் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக பாதுகாப்பு படையினர் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்துக்கு இடமான 6 மறைவிடங்களைக் குறிவைத்து கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தினர்.

இதில் அந்த 6 மறைவிடங்களும் முற்றிலும் அழிக்கப்பட்டதாகவும் அதில் பதுங்கியிருந்த 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் தெரிவித்தனர். (6)

# அல்கொய்தாவின் பெண் தலைவி சவுதி அரேபிய பொலிஸாரால் கைது

(டுபாய்)

சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின் லேடனின் தீவிரவாத அமைப்பான அல்கொய்தாவின் பெண் தலைவி ஹீலா அல்க் யூசாயா தீவிரவாத சதி செயலர்களை அரங்கேற்ற அல்கொய்தா அமைப்பிற்கு பெண்களை தெரிவு செய்வதாக தகவல்கள் வெளியாகின.

இதனையடுத்து மேற்கொண்ட தேடுதலில் 60 பெண் தீவிரவாதிகளை சேர்த்து ஒரு குழுவுடன் ஹீலா செயல்படுவதை சவுதி ஆரேபிய பொலிஸார் கண்டுபிடித்தனர்.

சவுதியில் அதிரடி வியூகம் வகுத்து அவரைக் கைது செய்தனர்.

அல்கொய்தாவின் நாசவேலைகளுக்கு அரபு நாடுகளில் ஹீலா நிதி திரட்டி கொடுத்து வந்ததும் விசாரணையில் தெரிய வந்ததுடன் அறக்கட்டளைகளிடம் பணமாகவும் நகைகளாகவும் ஹீலா பெற்று வந்துள்ளமையும் தெரியவந்துள்ளது. (6)

# நேபாள காங்கிரஸ் தலைவர் பால் பகதூர் ராய் காலமானார்

(காத்மண்டு)

பழம்பெரும் நேபாள காங்கிரஸ் தலைவர் பால் பகதூர் ராய் (90). நேற்று முன்தினம் காத்மண்டுவில் காலமானார்.

சிறுநீரக கோளாறு காரணமாக மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவர் சிறிது காலம் இடைக்காலப் பிரதமராக பதவி வகித்துள்ளதுடன் நேபாள காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது பல்வேறு துறைகளில் அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். (6)

# 2015 இல் சீனாவின் சனத்தொகை 139 கோடியாக உயரும் என மதிப்பு

(பீஜிங்)

அடுத்த 5 ஆண்டுகளில் சீனாவின் சனத்தொகை 139 கோடியாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து அந்நாட்டின் சனத்தொகை கொள்கை அமைப்பின் தலைவர் லி பின் கூறியதாவது ,

சீனாவின் மக்கள் தொகை 2015 இல் 139 கோடியாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அப்போது நகர சனத்தொகை 70 கோடியாக இருக்கும்.

நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக கிராம மக்களை விட நகர மக்கள் அதிகமாக இருப்பார்கள்.

2015 இல் 60 வயதுக்கு மேற்பட்டோர் எண்ணிக்கை 20 கோடியாக உயரும்.

2008 இல் சீனாவின் சனத் தொகை 13[illegible] கோடியாக இருந்தது. இது 1949 இல் சீனா உருவானபோது இருந்ததைப் போன்று 2.5 மடங்கு அதிகம்.

1978 க்குப் பின் சீனாவில் பெற்றோருக்கு ஒரு குழந்தை கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனால் 1978 முதல் 2008 வரை பிறப்பு விகிதம் 40 சதவீதத்துக்கும் குறைவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் முதல் முறையாக 15 வயதுக்குக் குறைவானவர்கள் அல்லது 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார். (6)




# சதாமின் உளவாளிக்கு குவைத்தில் குடியுரிமை

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேனின் உளவாளியாக நம்பப்பட்ட பவ்ஸி மற்றும் அவரது குடும்பத்தாருக்கு குவைத் அரசு குடியுரிமை அளித்து கௌரவித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு குவைத் மீது ஈராக் படையெடுத்தது. அப்போது சதாம் உசேனின் தலைமையிலான ஈராக் படை குவைத்தை சுற்றி வளைத்து கைப்பற்றியது.

ஈராக்கின் இந்த பெரிய வெற்றிக்கு பவ்ஸிதான் முக்கிய காரணம் என்று பேசப்பட்டது. 1990 ஆம் ஆண்டு போர் நடந்த போது பவ்ஸியும் , அவரது குடும்பத்தாரும் குவைத்தில் தங்கி ஈராக் படைக்கு தேவையான உளவுத் தகவல்களை சேகரித்துக் கொடுத்துள்ளனர்.


குவைத்தில் ஷியா முஸ்லிம்களின் மசூதிகள் எங்குள்ளன , ஷியா முஸ்லிம் மக்கள் அதிகமாக எப்பகுதியில் வசிக்கின்றனர் உட்பட முக்கியமான அனைத்து தகவல்களையும் கடிதத்தின் மூலம் இரகசியமாக சதாம் ஹுசேனுக்கு அளித்துள்ளார் பவ்ஸி.

குவைத் குறித்து இப்படி இரகசியத் தகவலை பவ்ஸி அளித்ததன் மூலமே அந்நாட்டை ஈராக் எளிதாக கைப்பற்ற முடிந்தது என்றும் அப்போது பேசப்பட்டது.

ஆனால் இதை பவ்ஸி திட்டவட்டமாக மறுத்து வந்தார். ஆனால் சதாம் ஹுசேனுக்கு பவ்ஸி எழுதிய கடிதங்கள் சில சமீபத்தில் சிக்கியுள்ளன. இதன் மூலம் சதாம் ஹுசேனுக்கு பவ்ஸியும் அவரது குடும்பத்தாரும் உளவாளிகளாக செயல்பட்டது உறுதியாகியுள்ளது.

எனினும் குவைத் அரசு இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. பவ்ஸிக்கும் அவரது குடும்பத்தாருக்கும் குடியுரிமை அளித்து கௌரவித்துள்ளது. (6)

# ஓடும் பஸ்ஸில் தீ விபத்து; 24 பேர் உடல் கருகிப் பலி



தெற்கு சீனாவில் வுசி என்ற இடத்துக்கு ஒரு அலுமினிய தொழிற்சாலைக்கு சொந்தமான பஸ் நேற்று முன்தினம் இரவு சென்று கொண்டிருந்தது. அதில் இரவு நேர பணிக்கு செல்லும் தொழிலாளர்கள் 45 பேர் பயணித்தனர்.

சுரங்க பாதை வழியாக சென்ற போது பஸ்சில் திடீரென தீப்பிடித்தது. இந்த விபத்தில் சிக்கி 24 பேர் உடல் கருகி இறந்தனர். 19 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை. (6)

# அமெரிக்காவின் மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது

## வெனிசுவேலா அறிவிப்பு

அமெரிக்காவின் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ள முடியாதென வெனிசுவேலா அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசாங்கம் தேவையில்லாமல் தமது நாட்டு உள்விவகாரங்களில் தலையீடு செய்வதாக வெனிசுவேலா சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என வெனிசுவேலாவின் வெளி விவகார அமைச்சர் நிகலோஸ் மாடுவேரா தெரிவித்துள்ளார்.

வோஷிங்டனுக்கு எதிராக மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் நாடுகள் மீது அமெரிக்கா அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகவும் வெனிசுவேலாவில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் கிடையாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வெனிசுவேலா, பெலாரஸ், கியூபா, ஈரான் போன்ற நாடுகளில் மனித உரிமை மீறல் இடம்பெற்று வருவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)



பால் ஏரோஸ்பேஸ் தயாரித்துள்ள புதுவகையான செயற்கைகோளை தற்போது விண்ணில் ஏவுவதற்கு இறுதிகட்ட வேலைப்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இச்செயற்கைக்கோள் மற்ற செயற்கைகோள்கள் மற்றும் கோள்களின் நிலையை கண்காணிக்கும்

பெரிய விடயங்களைப் போலவே சிறிய விடயங்களையும் கவனிக்கக்கூடிய மனமே உண்மையும் உரமும் பொருந்திய மனமாகும்.
– டாக்டர் ஜான்ஸன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாணத்தில் தரமற்ற வேலைகள் தருப்பது; தவிர்ப்பது எங்ஙனம்?

ஈழத்தமிழ் மக்களின் துன்பங்கள் ஒன்றல்ல. இனப்பிரச்சினை, யுத்தப்பாதிப்புகள் என்பதற்கப்பால், எங்கள் மனப்பாங்கின் குறுக்கம் மிகப் பெரிய பிரச்சினையாகிவிட்டது.

எதிலும் விசுவாசமில்லை. எந்தப்பணியிலும் பற்றுறுதியில்லை. எதற்கும் விமர்சனம், வியாக்கியானம் என்ற துன்பநிலை நீண்டு செல்கிறது. இதன் விளைவு தமிழினத்தின் எதிர்காலத்தை அதலபாதாளத்தில் விழுத்திவிடும். இத்தகைய குறுகிய மனநிலை கொண்ட சமூக உருவாக்கம் யாழ்ப்பாணத்தில் வேகமெடுத்துள்ளதென்பதை வேதனையோடு சொல்லித்தானாகவேண்டும்.

இதற்குப் பல உதாரணங்களை முன்வைக்க முடியும். குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கட்டிடம் மற்றும் அதனோடு இணைந்த பணிகளை ஒரு கணம் எடுத்துப்பாருங்கள்.

எங்காவது அழகான கட்டிடவாக்கம் நடந்துள்ளதா? என்று.

பரவாயில்லை அழகான கட்டிடம் வேண்டாம். உறுதியான கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளதா? இல்லவே இல்லை.

வில் எடுத்தவன் வில்லன் என்பது போல் யாழ்ப்பாணத்தில் சாந்தகப்பை எடுத்தவன் மேசன் என்பதாக மாறிவிட்டது.

அவசரமான வேலை, ஒழுங்கற்ற வேலை, காலம் கடத்தும் சிந்தனை, வேலையில் விசுவாசமற்ற தன்மை போன்றவற்றை யாழ்ப்பாணத்தில் பலரிடம் காண முடிகின்றது.

நேற்றுமுன்தினம் ஆலயமொன்றில் தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. பிற்பகல் 3 மணிக்கு வெள்ளோட்டம் என அறிவிக்கப்பட்டிருந்தாலும், மாலை 4 மணிக்கும் வர்ணம் பூசி முடியவில்லை. எப்படியிருக்கிறது எங்கள் தொழிற் சிறப்பு.

தனித்து பணத்தை மட்டும் கருத்தில் கொண்டு பாவ காரியம் நடந்தேறுகிறது.

இது மட்டுமல்ல, ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேகம், என்னே கொடுமை! கும்பம் வைத்த பின்பும் வர்ணம் பூசும் பணி நடக்கும். இந்த அவசரத்தால் தரமற்றவையும் தகுதியற்றவையும், தகாதவையும் உருவாக்கப்படும்.

இது தொடர்பில் இத் தொழிற்றுறைகளை நடத்துபவர்கள் ஓரளவுக்கேனும் மனச்சாட்சியுடன் செயலாற்ற வேண்டும்.

இதற்கு மேலாக யாழ்ப்பாணம் முற்றவெளியில் உள்ள பஸ் தரிப்பு நிலையம், பொம்மைவெளியிலுள்ள சுவட்டுப்பசளை தயாரிக்கும் கட்டிடப் பகுதி என்பவற்றுக்குச் சென்று பாருங்கள் அவற்றின் சுவரை சீற்றுகள் கழன்று, பறந்து, உடைந்து கிடக்கின்றன.

ஐயகோ! என்ன செய்வது பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள் இவர்கள் இருந்தென்ன பலன்?

யாழ்ப்பாணத்தில் எந்தக் கட்டிடமாவது மழை காலத்தில் ஒழுக்கு இல்லாத கட்டிடமாக இருக்கிறதா? இதையாரேனும் நிரூபித்தால் நாங்கள் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்போம். அதை நிரூபிக்க முடியாவிட்டால் நீங்கள்...?

# மூன்றாம் மண்டல நாடாக இலங்கையை கருதமுடியாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையைத் தொடர்ந்து மூன்றாம் மண்டல நாடாகக் கருத முடியாதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். இலங்கையின் தனிநபர் தலா தேசிய வருமானம் இரண்டாம் மண்டல நாடுகளுக்கு நிகராக உயர்வடைந்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆசியக் கண்டத்தின் அதிசயமாக இலங்கையை இந்த அரசாங்கம் மாற்றியமைக்கும். சமாதானம் இல்லாத அபிவிருத்தியோ அல்லது அபிவிருத்தி இல்லா சமாதானமோ நீடிக்காது என்ற ஜனாதிபதியின் கொள்கைக்கு அமைய செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடிகளை அகற்றி இடம்பெயர் மக்களை மீள குடியேற்றுவதே இந்த அரசாங்கத்தின் முதன்மைக் கடமையாக அமைந்துள்ளதெனவும் இடம்பெயர் மக்கள் தங்களது இயல்பு வாழக்கையை தொடர்வதற்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ச–5)

# ஈழத்தமிழருக்கு அரசியல் தஞ்சம் கோரி அவுஸ்திரேலியப் பிரதமருக்கு அழுத்தம்

(வாசிங்டன்)

அவுஸ்திரேலியாவுக்கு புகலிடம் கோரி வரும் ஈழத்தமிழ் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்க ஆஸியின் புதிய பிரதமர் ஜுலியா கில்லார்ட் உரிய நடவடிக்கைகளை கட்டாயம் மேற்கொள்ளவேண்டும் என்று அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று கோரியுள்ளது.

புகலிடம் கோரி நாட்டுக்கு வரும் இலங்கையர், ஆப்கானிஸ்தானியர் ஆகியோருக்கு அரசியல் தஞ்சம் வழங்கும் நடவடிக்கைகளை கடந்த ஏப்ரல் 08 ஆம் திகதி முதலான மூன்று மாதங்களுக்கு ஆஸி இடைநிறுத்தி வைத்துள்ளது.

இந்நிலையில் இந்த அகதிகளுக்கு புகலிடம் வழங்கும் நடவடிக்கைகளை தொடர்வதா? இல்லையா? என்கிற முடிபை எதிர்வரும் 08 ஆம் திகதி ஆஸி அரசு அறிவிக்க வேண்டும்.

இச்சூழ்நிலையிலேயே ஆஸியின் புதிய பிரதமர் இந்த அகதிகளுக்கு புகலிடம் வழங்கப்பட வேண்டும் என்கிற தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும், இடைநிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் புகலிடம் வழங்கும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் இந்த அமைப்பு கேட்டுள்ளது. (ச–5)

# ஜனாதிபதியின் 2 ஆவது பதவிக்காலத்தை கேள்விக்குட்படுத்தி பொன்சேகா மனு

(கொழும்பு)

ஜனாதிபதிப் பதவிக்கு மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றமையை கேள்விக்கு உட்படுத்தி முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவை உயர் நீதிமன்றம் அடுத்த செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சரத் பொன்சேகா போட்டியிட்டு இருந்தார். அத்தேர்தலில் இடம்பெற்ற மோசடிகள் காரணமாகவே அவரால் ஜனாதிபதியாக வர முடியவில்லை என்று தெரிவித்து அம்மனுவை தாக்கல் செய்திருந்தார்.

ஆகவே அத்தேர்தல் முடிபை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் வாக்குகளை மீண்டும் எண்ண வேண்டும் என்றும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவர் யார் என்பதை புதிதாக அறிவிக்கவேண்டும் என்றும் அவர் மனுவில் பிரதானமாகக் கோரியுள்ளார்.

இம்மனு பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையில் சக நீதியரசர்களான சிராணி பண்டாரநாயக்க, காமினி அமரதுங்க, கே.ஸ்ரீபவன், எஸ்.ஐ.இமாம் ஆகிய ஐந்துபேர் கொண்ட நீதியரசர்கள் குழு முன் நேற்று விசாரணைக்கு வந்தது. பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் அவர்களின் ஆட்சேபனைகளை மன்றில் சமர்ப்பித்தனர்.

மனுதாரரின் சட்டத்தரணிகள் இந்த ஆட்சேபனைக்கு பதில் அளிக்க மூன்று மாத அவகாசம் கோரினர். அத்துடன் வழக்கின் முக்கியத்துவம் கருதி நீதிமன்றம் விசாரணையை துரிதமாக முடித்து தீர்ப்பை அறிவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். இந்த மனு செப்ரெம்பர் 13,14,15 ஆம் திகதிகளில் விசாரிக்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ச–5)

# பொன்சேகாவின் உரிமை மறுப்பு! பெங்கி எழுகிறார் ரணில்

(கொழும்பு)

கென்யாவில் செப்ரெம்பர் மாதம் இடம்பெற இருக்கும் பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தொடரில் பங்கு பற்ற அரசு, சரத் பொன்சேகா எம்.பிக்கு தடை விதித்துள்ளமைக்கு எதிராக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் பொது நலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்திற்கும் எழுத்து மூலம் முறைப்பாடு செய்ய உள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் இதனை அறிவித்தார். பொது நலவாய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் இலங்கைக் கிளையைச் சேர்ந்த அநேகமானவர்கள் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்றும் அதனாலேயே பொன்சேகாவை இம் மாநாட்டுக்கு அனுப்ப மாட்டார்கள் என்று தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

அரசின் இந் நடவடிக்கை கண்டனத்திற்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார். சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான தெரிவுக்குழு பொன்சேகாவை இக்கூட்டத் தொடரில் பங்குபற்ற முன்பு தெரிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## வாழ்க்கை



அப்படியால் இல்லறத்தார்களுக்கு வழி என்ன? சுவாமிஜி சொல்கிறார். சிறு சிறு ஆசைகளை அனுபவித்துக் தீர்க்க வேண்டும் பெரிய ஆசைகளை எல்லாம் விவேகத்தால் ஆராய்ந்து விட்டு விட வேண்டும் இதுவே வழி.

திருமணம் செய்து கொண்டால் என்ன! பெற்றோருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் உணவும் உடையும் கொடுத்துப் பராமரிப்பது போல் மனைவியையும் கவனித்துக் கொள். அவளுக்கும் ஆன்மீகம் பற்றிக் கூறி உன் வழிக்கு இழுத்துக்கொள். இல்லறத்தில் வாழ்ந்த படியே காமத்தையும் பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியவான்கள் . ஆனால் அது எத்தனை பேரால் முடியும்.

காமபோகத்தின் விளைவாகப் பிறக்கின்ற குழந்தை ஆரியன் அல்ல என்பது மனுவின் கருத்து என்பதையும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். வேதமுறைகளின் படி கருவுற்று வாழ்ந்து இறப்பவனே ஆரியன் ஆம் ஒவ்வொரு நாட்டிலும் இத்தகைய குழந்தைகள் மிகக் குறைவாகவே பிறக்கிறார்கள் அதன் பயனாகவே இன்று நாம் கலியுகம் என்று கூறும் இவ்வளவு கெடுதல்கள் உலகில் இருக்கின்றன.

## பொலிஸார் மீது மானநஷ்ட வழக்கு தொடருவேன்

### நடிகை விஜயசாந்திபேட்டி

(நகரி)

பிரபல நடிகையும் தெலுங்கானா ராஷ்ட்ரீய சமிதி கட்சி எம்.பியுமான விஜய சாந்தி ஜதராபாத்தில் உள்ள கட்சி தலைமை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தெலுங்கானாவுக்கு எதிராக யார் பேசினாலும் வெட்டிக் கொலை செய்வேன் என்று ஆவேசமாக பேசினார்.

இவரது இந்த பேச்சு ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது மாநில தலைமை தேர்தல் அதிகாரி சுப்பாராவ் விஜயசாந்தி மீது நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து பொலிஸார் அவரை கைது செய்து சிறையில் அடைந்தனர். பின்னர் அவர் பிணையில் வெளியே வந்தார். அவரை பொலிஸார் கைது செய்து வானில் ஏற்றிய போது அவரது புடவை கிளிந்தது. இது பற்றி விஜயசாந்தி கூறியதாவது,

நான் ஒரு தொலுங்கானா பெண் என்பதால் ஆந்திரப்பொலிஸார் என்னை அவமானப்படுத்தினர். நடு வீதியில் எனது புடவையை பொலிஸார் கிளித்ததை எந்தப்பெண்ணும் ஏற்றுக்கொள்ளமாட்டார் எனக்கு நேர்ந்த கொடுமை இந்த உலகத்தில் எந்தப் பெண்ணுக்கும் நேரக்கூடாது. என்னை அவமானப்படுத்திய பொலிஸார் மீது மான நஷ்ட வழக் குத் தொடருவேன். 12 தொகுதிகளுக்கு நடை பெறும் இடைத்தேர்தலில் தெலுங்கானா கட்சி வெற்றி பெற பாடுபடுவேன் ஒவ்வொரு தொகுதி யாகச் சென்று தீவிர பிரசாரம் செய்வேன் எங்கள் கட்சி கூடுதல் வாக்கு வித்தியாசத்தில் பெற்றி பெறும் என்றார். (6)

# சென்னையில் மறியலில் ஈடுபட்ட பா.ஜ.க. வினர் 300 பேர் கைது


சென்னை ஸ்பென்சர் பிளாசா சந்திப்பில் அண்ணாசாலையில் மறியல் போராட்டம் நடத்த நேற்றுக்காலை பா.ஜனதாவினர் திரண்டனர்.

சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டிக்கும் வகையில் காலி சிலிண்டரை பாடை கட்டி எடுத்துவந்தனர். கூட்டத்தில் இரண்டு பெண்கள் வாயிலும் ,கண்களிலும் கறுப்புத்துணி கட்டி வந்தனர். காலை 10.30 மணியளவில் அண்ணாசாலையில் கூடியிருந்தவர்களை கைது செய்வதற்காக பொலிஸார் திரண்டனர்.

ஆனால் மாநிலத் தலைவர் பொன். இராதாகிருஸ்ணன் வந்த பிறகு போராட்டம் நடத்தித் தான் கைதாவோம் என்று பா.ஜனதாவினர் தெரிவித்தனர்.

ஆனாலும் அவர்களை விடாமல் பொலிஸ் வானில் வலுக்கட்டாயமாக ஏற்றினார்கள். இதனால் பொலிஸாருக்கும் பா. ஜனதாத் தொண்டர்களுக்கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

10.45 மணியளவில் மாநிலத் தலைவர் பொன்.இராதாகிருஸ்ணன்,முன்னாள் தலைவர் இல.கணேசன், பொதுச்செயலாளர் மோகன் ராஜலு ஆகியோர் அங்கு வந்தனர்.



உடனே ஆங்காங்கே நின்ற தொண்டர்கள் நடு வீதியில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர்.

மறியலில் ஈடுபட்ட மாநிலத்தலைவர் பொன். இராதாகிருஸ் ணன், இல .கணேசன் ,மாநிலத் துணைத் தலைவர் வானதி சீனிவாசன்,மத்திய சென் னை மாவட்டத் தலைவர் ஜெய்சங்கர்,தென் சென்னை மாவட்ட தலைவர் ரவிச்சந்திரன் , லட்சுமி சுரேஸ்,பாணிகிரகா சிறிதர், அனு, டால்பின் சிறிதர்,குமாரவேல் உட்பட சுமார் 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

அப்போது பொன். இராதாகிருஸ்ணன் கூறியதாவது,

மத்திய அரசு அறிவித்துள்ள பெற்றோல், டீசல் விலை உயர்வை வாபஸ் பெறும் வரை போராடுவோம். நாடு முழுவதும் கடையடைப்பு போராட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. தமிழ் நாட்டில் பல பகுதிகளிலும் கடையடைப்புக்கு பொதுமக்கள் முழு அளவில் ஆதரவு தெரிவித்துள்ளனர். ஆனால் அரசு காவல்துறை மூலம் கட்டாயப் படுத்தி கடைகளை திறக்கச் செய்கிறார்கள் என்றார். (6)

# கின்னஸ் சாதனை படைக்கத் தயாராகும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டு பந்தல்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டுப் பந்தல் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுவதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் கூட்டம் கூடியது. உள்நாடு மட்டுமன்றி அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, பின்லாந்து, அயர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மொரிஷியஸ் உள்ளிட்ட 50 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழறிஞர்கள், மொழியியல் அறிஞர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டு ஆரம்ப விழா மற்றும் நிறைவு விழாவுக்காக கொடிசியா அரங்கின் முற்பகுதியில் பிரமாண்டமான பொது அரங்கம் அமைக்கப்பட்டது. இதில் கருத்தரங்குகள், இசை நிகழ்ச்சிகள், கவியரங்கம் உள்ளிட்ட பிற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இதனை உலகிலேயே மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்ட பந்தல் என்ற சாதனையாக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய பந்தல் அமைப்பு நிர்வாகத்தினர் விண்ணப்பித்துள்ளனர். இது குறித்து பந்தல் ஒப்பந்தக்காரர் தஞ்சாவூர் ஆர்.சுப்பிரமணியம் கூறுகையில்,

செம்மொழி மாநாட்டுக்காக அமைக்கப்பட்ட பந்தல் 4.5 இலட்சம் சதுர அடி பரப்பு கொண்டது. இது 60 ஆயிரம் பேர் அமரும் வகையிலும் ஒரு இலட்சம் பேர் நின்று கொண்டு நிகழ்ச்சியை ரசிக்கும் வகையிலும் அமைக்கப்பட்டது. 400 கலைஞர்கள் இணைந்து 45 நாட்களில் இப் பந்தலை அமைத்தனர்.

மாநாட்டு பந்தல் மன்னார் கால அரண்மனைகள் போல காட்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டது. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள அலங்கார வேலைப்பாடுகள் போல மாநாட்டுப் பந்தலின் உட்புறம் அமைக்கப்பட்டிருந்தது.

பந்தலின் மொத்த நீளம் 1.100 அடி, அகலம் 420 அடி, பந்தலின் முகப்பு 26 அடி உயரமாக அமைக்கப்பட்டது பனை ஓலைகள் மற்றும் தாமிர தகடுகளை கொண்டு பந்தலின் முகப்பு கலை நயமாக வடிவமைக்கப்பட்டது. 8ஆவது உலகத் தமிழ் மாநாட்டின் போது 3 இலட்சம் சதுர அடியில் பந்தல் அமைக்கப்பட்டதாகவும் இந்த முறை அமைக்கப்பட்டது போல இது போன்ற பந்தல் இது வரை அமைக்கப்படவில்லை என்றும் இதை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறச் செய்ய முயற்சிக்கின்றோம்.

மாவட்ட ஆட்சியர், பொதுப்பணித்துறை மூலமாகவும் இதற்காக தனியாக விண்ணப்பம் அனுப்பப்படவுள்ளது என்றார். (6)

# பாரதச் செய்திகள்

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தொடர்ந்து உதவுவோம்

## பரிசளிப்பு விழாவில் நடிகர் சூர்யா


(சென்னை)

சிவகுமார் கல்வி அறக்கட்டளை மற்றும் அகரம் பவுண்டேஷன் சார்பில் சிறந்த மாணவர்களுக்கு பரிசுத்தொகை வழங்கும் விழா, சென்னை பிலிம்ஸ் சேம்பரில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதில் மாநில, மாவட்ட அளவில் முதல் இடம்பிடித்த மாணவர்கள்,இலங்கை அகதி மாணவர்கள்,மாற்றுத்திறனுள்ள மாணவர்கள் ,அதிக மதிப்பெண் பெற்று உயர் கல்வி படிக்க இயலாத மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டதுடன் கல்விக்குப் பாடுபடும் தன்னார்வ அமைப்புகளுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டது.

இவ்விழாவில் சிவகுமார் பேசுகையில், ''ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய் வரை கல்விக்காக வழங்கி வருகிறோம் எனவும் இந்தத் தொகை ஆண்டுக்கு ஆண்டுக்கு உயர்ந்து கொண்டே இருக்கும் எனவும் நான் ஆரம்பித்ததை என் மகன்மார் சிறப்பாக செய்து வருவது மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றும் கூறினார்.

தொடர்ந்து சூர்யா பேசுகையில், இந்த கல்விச் சேவையை விளம்பரத்திற்காக செய்யவில்லை. எங்களை விட அதிகம் உதவி செய்கிறவர்கள் நிறையப்போர் இருக்கின்றனர். நாங்கள் சினிமாவில் இருப்பதால் இது வெளியே தெரிகிறது. இந்தப் பணியைத் தொடர , நானும் தம்பி கார்த்தியும் சினிமாவில் இன்னும் அதிக கவனம் செலுத்தி, அதிக படங்களில் நடித்து அதிகம் சம்பாதித்து இதைச் சிறப்பாகச் செய்வோம். இன்னும் பலருக்கு உதவி செய்வோம். அதற்காக நாங்கள் தொடர்ந்து



பாடுபடுவோம் என்றார். அத்து ன் ஈழ மக்களுக்கு அங்கு சென்று உதவி செயய முடியவில்லையே என்ற ஆதங்கம் இருக்கிறது எனவும் அதனால் தான் இங்குள்ள அகதி மாணவர்களுக்கு உதவுகிறோம் எனவும் அகதி முகாம்களில் உள்ள மாணவர்கள் பற்றிய சரியான தகவல்களை அந்தந்தப் பகுதியில் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் எங்களுக்கு தந்துதவ வேண்டும் என்றும் கூறினார்.

நாங்கள் சினிமாவில் நடிப்பதால் தான் ஹீரோக்கள். ஆனால் ,நன்றாகப்படித்து முன்னுக்கு வரத்துடிக்கும் மாணவர்கள் தான் நிஜ ஹீரோக்கள். மாணவர்கள் கடவுளை மட்டும் நம்பாது உழைப்பையும் நம்ப வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இவ்விழாவில் சிவகுமார் எழுதிய 'இது ராஜபாட்டை அல்ல' என்ற நூலில் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலை இளம்பிறை மணிமாறன் வெளியிட சூர்யா ,கார்த்தி ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (6)

# அமெரிக்க அதிபர் ஒபாமா நவம்பரில் இந்தியா விஜயம்

அமெரிக்கா சென்றிருந்த இந்திய பிரதமர் மன்மோகன்சிங் அந்நாட்டு அதிபர் பராக் ஒபாமாவை இந்தியா வரும்படி அழைப்பு விடுத்தார்.

அதை ஏற்றுக்கொண்ட அவர் எதிர்வரும் நவம்பர் மாதம் தனது மனைவி மிச்சேல் ஒபாமா மற்றும் குழந்தைகளுடன் இந்தியா வரவிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதை தொடர்ந்து அவர் இந்தியா வருவதற்கான ஏற்பாடுகள் இப்போதே ஆரம்பமாகி விட்டன. இந்தியா- அமெரிக்கா அதிகாரிகள் அவரது சுற்றுப்பயண விவரம் குறித்து ஆலோசனை நடத்தி வருகின்றனர்.


நவம்புர் மாதம் 7ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை அவர் 4 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கிறார்.

ஒபாமா இந்தியா வருகை தரும் போது அவர் செல்ல உள்ள நகரங்கள் மற்றும் சுற்றிப்பார்க்கும் இடங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

இது குறித்து ஆய்வு நடத்த அதிபர் ஒபாமாவின் பாதுகாப்பு அதிகாரிகள் அமெரிக்காவில் இருந்து அடுத்த வாரம் டெல்லி வரவுள்ளனர். அவர்கள் இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் டிம் ரோமர் தலைமையில் ஒபாமாவின் சுற்றுப்பயணம் குறித்து ஆலோசனை நடத்தவுள்ளனர்.

அமெரிக்காவில் இருந்து புறப்பட்டு டில்லி வரும் ஒபாமா மும்பை, சென்னை, பெங்களூர் ஆகிய 3 பெருநகரங்களில் சுற்றுப் பயணம் செய்ய திட்டமிட்டுள்ளார். (6)

# வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளின் நேற்றைய முடிவுகள்





வட மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகியுள்ளது.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய மேற்படி போட்டிகள் தொடாந்து நான்கு நாட்களாக நடைபெறவுள்ளன.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய போட்டிகளில் இறுதிப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்கள் முறையே வருமாறு,

**17 வயதுப்பிரிவு உயரம் பாய்தல் (பெண்)**

ஆர்.தரசுதா (கொக்குவில் இந்துக் கல்லூரி), அ.மேரிஜனனி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), கே.அபிர்ணா (கம்பர்மலை வித்தியாலயம்).

**17 வயதுப்பிரிவு கோலூன்றிப் பாய்தல் (ஆண்)**

ஏ.ஏ.எச்.றொசான் (அருணோதயக் கல்லூரி), ஆர்.பி.டெஸ்மன்ராஜ் (குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), வி.சஜீந்தன் (தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம்).

**17 வயதுப்பிரிவு ஈட்டி எறிதல் (பெண்)**

எஸ்.டென்சிகா (வட்டு மத்திய கல்லூரி), கே.டர்சிகா (ஊரெழு சிறி கணேசா வித்தியாலயம்), ஆர்.நயாமி (வவுனியா அலகொல்ல மகா வித்தியாலயம்).

**11 வயதுப்பிரிவு நீளம் பாய்தல் (பெண்)**

அ.அபிநயா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜே.ஜெயதிலகா (வவுனியா அக்கரைப்பொதி மகா வித்தியாலயம்), அ.அனுசலா (மன்னார் கற்கிடந்த குளம றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை).

**21 வயதுப்பிரிவு 100 மீற்றர் தடைதாண்டல் (பெண்)**

ந.ஜன்னி (அருணோதயக் கல்லூரி), டி.டோபிகா (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), ஜே.புஸ்பதேவி (புதுக்குளம் மகா வித்தியாலயம்).

**21 வயதுப்பிரிவு 110 மீற்றர் தடைதாண்டல் (ஆண்)**

டி.டெனிஸ்ரன் (மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம்), எஸ்.சர்வன் ( கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), எச்.சிறிமுகுந்தவேல் (ஹாட்லிக் கல்லூரி).

**17 வயதுப்பிரிவு போலூன்றிப் பாய்தல் (பெண்)**

அ.பவித்திரா (அருணோதயக் கல்லூரி), எம்.பிருந்தா (முல்லைத்தீவு துணுக்காய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), எஸ்.கிறிஸ்ரியா (பணடத்தரிப்பு ஜசிந்தா).

**21 வயதுப்பிரிவு பெண்கள் தட்டெறிதல**

எஸ்.கீர்த்திகா (மகாஜனக்கல்லூரி), எஸ்.ஜனுகா (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), எஸ்.சிறிசக்தி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி).

**15 வயதுப்பிரிவு 100 மீற்றர் தடை தாண்டல்**

எஸ்சிறிசன் (யூனியன் கல்லூரி), ஜே.கஸ்ரோ (மன்னார் சென்.சேவியர் கல்லூரி), ரி.நிரோஜன் (விக்டோரியாக் கல்லூரி).

**17 வயதுப்பிரிவு ஆண்கள் ஈட்டி எறிதல்**


சி.எல்.லிவிங்டன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), கே.சிலோஜன் கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.சசிகரன் (மன்னார் வடக்கந்தல் றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை).

**19 வயதுப்பிரிவு ஆண்கள் உயரம் பாய்தல்**

எம்.கிருஸ்ணா (மகாஜனக்கல்லூரி), அ.ஆருரன் (வவுனியா தமிழ் மகாவித்தியாலயம்), ஆர்.வதுாஸனன் (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி).

# கானா அணியின் கோலை தடுத்து பந்தை பிடித்தது கடவுளின் கை

## உருகுவே வீரர் சாரஸ் கூறுகிறார்



(ஜோகனஸ்பேர்க்)

கானா அணி வீரர் அடியாஸ் அடித்த பந்தை பிடித்தது.கடவுளின்கைஎன்று உருகுவே வீரர் சாரஸ் கூறியுள்ளார். இந்தக் கோலைத் தடுத்ததால் ஒரேநாளில் உருகுவேயில் அவர் ஹீரோவாகியுள்ளார்.

உல்க கிண்ண காலிறுதி ஆட்டத்தில் உருகுவே கானா அணிகள் மோதின. இந்தப் போட்டியின் போது கூடுதல் நேரத்தில் 119ஆவது நிமிடத்தில் கானா வீரர் அடியாஸ் அடித்த பந்தை உருகுவே வீரர் சாரஸ் கையால் பிடித்தார். அவர் பிடிக்கவில்லை என்றால் அது கோலாகியிருக்கும். அவர் களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

கானாவுக்கு பெனால்டி வழங்கப்பட்டது. அந்த பெனால்டியை கானா வீரர் அசமாகியான் மேல்கம்பத்தில் அடித்து வீணடித்தார். இறுதியில் டைபிரேக்கரில் உருகுவே 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்த உலகக்கிண்ணப் போட்டியில் ஆப்பிரிக்க மக்களின் கடைசி நம்பிக்கையும் சாரசின் செயலால் தகர்ந்து போனது. அத்தோடு சாரசை சகட்டு மேனிக்கும் திட்டித் தீர்க்கின்றனர். ஆனால் இது இன்னொருகடவுளின் கை என்று சாரஸ் பெருமையாக கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறும் போது,

அனைவரும் என்னை விமர்சிக்கின்றனர். ஏமாற்றுக்காரர் என்று வசைப்பாடுகின்றனர். ஆட்டத்தின் கடைசிக்கட்டத்தில் பந்து கோலுக்குள் போவதை பார்த்துக்கொண்டு என்னால் சும்மா இருக்க முடியவில்லை. எனது கைகள் என்னை அறியாமலேயே பந்தை நோக்கிச் சென்றன. அந்தக்கோலை தடுக்க எனக்கு வழியும் தெரியவில்லை இனி மேல் இந்தக் உலகக்கிண்ணப் போட்டியில் என்னால் விளையாட முடியுமா? என்று தெரியவில்லை.

ஆனால் உருகுவே அணியை அடுத்த சுற்றுக்குள் முன்னேற வைத்த மகிழ்ச்சி எனக்குள் இருக்கிறது. சொல்லப்போனால் இது இன்னொரு கடவுளின் கை என்றார்.

கடந்த 1986ஆம் ஆண்டு மெக்சிகோவில் நடந்த உலகக்கிண்ண தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிராக மரடோனா கையை வைத்து தட்டி ஒரு கோல் அடித்தார் பின்னர் அது கடவுளின் கை அடித்தகோல் என்று கூறினார்.

அதுபோலவே இது இன்னொரு கடவுளின் கை என்று சாரஸ் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை பந்தை கையால் தொட்ட சாரஸ் அரையிறுதியில் விதிக்கப்பட்ட தடையோடு தப்பினார்.

உலகக்கிண்ண காலிறுதி ஆட்டத்தில் உருகுவே கானா அணியுடன் மோதியது. எனினும் முன்ஸ்போர்ட்ஸ்மேன்ஷிப் இல்லாமல் நடந்து கொண்டதற்காக சாரஸுக்கு 3 போட்டிகிளில் விளையாட தடை விதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவருக்கு ஒரு போட்டிக்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டுள்ளது. இன்று நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் உருகுவே-நெதர்லாந்து அணியை எதிர்கொள்கிறது.

இந்த போட்டியில் மட்டும் சாரஸ் விளையாட முடியது. ஒரு வேளை உருகுவே இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றால் சாரஸ் விளையாட முடியும். அதுபோல் 3ஆவது இடத்துக்கான போட்டியிலும் சாரஸ் விளையாடலாம். இந்த உலக கோப்பை போட்டியில் இதுவரை சாரஸ் 3 கோல்கள் அடித்துள்ளார்.




உலகக் கிண்ண கால்பந்தாட்டம்-2010
சம்பியனாகும் நாடு?........................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 09.07.2010 இற்கு முன்னர் அனுப்புவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் 10 வெற்றியாளர்களுக்கு டயலொக் நிறுவனத்தின் அழகிய Boot Bag பரிசாக வழங்கப்படும்.

பெயர் : ........................
முகவரி : ........................
........................
தொலைபேசி : ........................
தே.அ.அ. இல. : ........................

விளம்பரப் பகுதி,
வலம்புரி,
இல.3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

வலம்புரி
Dialog

# நாடாளுமன்ற சிறப்பு உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது

## சபாநாயகரைச் சந்திக்க அமைச்சர் டக்ளஸ் உத்தேசம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற சிறப்புரிமையைத் தவறான முறையில் பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீது ஆதாரமற்ற அவதூறுகளைச் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரப்பி வருகின்றனர்.

இது குறித்து நாடாளுமன்ற சபாநாயகரைச் சந்தித்துப் பேசுவதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் உயர் பீடத்தினரும் கட்சி சார்ந்த நாடாளுமன்றக் குழுவினரும் ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலும் தெரிவிக்கையில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மக்கள் நலன் சார்ந்த வேலைத் திட்டங்கள், அரசியல் தீர்வு குறித்துக் கட்சி முன்வைத்திருக்கும் திட்டங்களை நோக்கிக் கிடைத்திருக்கும் சகல தரப்பு அங்கீகாரம் மற்றும் மக்கள் பணிகள் குறித்து மக்களிடமிருந்து பெருகி வரும் பேராதரவு போன்றவற்றைக் கண்டு சகிக்க முடியாத சிலர்,

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீது திட்டமிட்ட முறையில் அவதூறுகளைப் பரப்பி வருகின்றனர் என்றும் ஆனாலும் இது குறித்துப் போற்றுவோர் போற்றட்டும். புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்று இடைவிடாப் பணியினை கட்சி முன்னெடுத்து வருகின்ற போதிலும் கட்சியின் ஆதரவாளர்களும் கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் பல்துறை சார்ந்தவர்களும் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு இது குறித்துக் கடந்த சில நாள்களாகப் பேசி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக கட்சி மீது அவர்கள் கொண்டிருக்கும் காத்திரமான அக்கறையினையும் மன விருப்பங்களையும் கருத்தில் கொண்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவினர் நாடாளுமன்ற சபாநாயகர் அவர்களைச் சந்தித்துப் பேசுவது எனத் தீர்மானித்துள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தி.மகேஸ்வரன் மற்றும் சாவகச்சேரி மாணவன் திருச்செல்வன் கபில்நாத் ஆகிய இருவர் மீதான திட்டமிட்ட படுகொலைச் சம்பவங்கள் குறித்துத் திட்டமிட்ட வகையில் பழி சுமத்தும் நோக்கிலான பரப்புரைகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்விரு வழக்குகளும் இன்னும் நீதிமன்றத்திலிருந்து வருகின்ற அதேவேளை தி.மகேஸ்வரன் மீதான் படுகொலை குறித்து கைது செய்யப்பட்டிருப்பவர் புலிகள் இயக்க உறுப்பினர் என்பது விசாரணைகளின் மூலம் ஏற்கனவே தெரிய வந்துள்ளது.

இதேவேளை திருச்செல்வம் கபில்நாத் மீதான படுகொலை குறித்த வழக்கு இன்னமும் நீதிமன்றத்திலிருந்து வருவதோடு கொலைக் குற்றவாளியான ஜீவன் என்ற புலிகள் இயக்க உறுப்பினர் இந்தப் படுகொலை குறித்து தேடப்பட்டு வருவதோடு இவ் வழக்கின் நியாயத் தீர்ப்பின் மூலம் உண்மைகள் வெளிவருவதற்கு முன்பாகவே அவதூறுகளைப் பரப்பும் வகையிலான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மற்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களில் சாவகச்சேரி நீதிபதி அவர்களது இடமாற்றமும் ஒன்றாகும்.

இது இவ்வாறிருக்க இந்த இடமாற்றம் குறித்துத் தவறான கற்பனைக் கதைகளை உருவாக்கி அரசியல் தலையீட்டின் காரணமாகவே இந்த இடமாற்றம் நிகழ்ந்ததாகச் சிலர் குற்றஞ்சுமத்தியும் வருகன்றார்கள்.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்ட அவதூறுகளைப் பரப்பும் அவசரத்தில் தமது கண்மூடித்தனமான கற்பனைக் கதைகளால் யாழ்.குடாநாட்டு தீவகப் பகுதிப் பெண்கள் சமூகத்தவர்களும் கேவலப்படுத்தப்படுகின்றார்கள் என்பதை மறந்து விடுகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும் என ஈ.பி.டி.பியின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–5)

## மட்டக்குளிய விவகாரம் பொதுமக்கள் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

மட்டக்குளியவில் கைது செய்யப்பட்ட நபர் இறந்து விட்டார் என்று பொய்யான செய்தி பரவியதன் காரணமாகவே பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் இலங்கக்கோன் தெரிவித்தார்.

மட்டக்குளியப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு பொலிஸாருக்கும் அப் பகுதி மக்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டது. பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்பட்டதையடுத்து இந் நிலை ஏற்பட்டதாக அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று பிற்பகல் பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்றது. (ச)

## ரணில்...

சுறுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலும் அதே கருத்தினை அவர் மீண்டும் தெரிவித்துள்ளார்.

எம்.ரிவி. மற்றும் எம்.பி.சி. ஊடக நிறுவனத்தின் உரிமையாளர்க்ளான மகாராஜ குழும நிறுவனத்தினரும் பெருந்தெருக்கள் அமைச்சர் மேர்வின் சில்வாவும் இணைந்து தம்மைக் கொலை செய்ய முயற்சிக்கின்றார்களா? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.(ச–5)

## நைரோபி...

த்து உரிமைகளும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் உள்ளன.

எனவே பொதுநலவாய நாடாளுமன்ற சங்க மாநாட்டில் கலந்து கொள்வதற்கு சரத் பொன்சேகாவுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன என ஜனநாயக தேசிய முன்னணியின் செயலாளர் டிலான் அலஸ் தெரிவித்துள்ளார். (ச–5)

## சர்வதேச...

நாட்டில் சட்ட ஒழுங்குகள் நிலைநாட்டப்படுமாயின் தனது மருமகன் தனுக திலகரட்ண நீதிமன்றில் ஆஜராவார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருமகனை நீதிமன்றில் ஒப்படைக்க வேண்டிய சட்டக் கடப்பாடு கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச–5)

## பூநகரி...

ளார்.

யாழ்.குடாநாட்டிற்குத் தேவையான மணலை யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்வதால் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சூழல் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டே பூநகரி மற்றும் மன்னம்பிட்டிய மணலை இங்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் மூலம் மணலுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு விரைவாக மணல் விநியோகம் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை...

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதில்லை என்ற முடிவை ஐரோப்பிய ஒன்றியம் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

பெல்ஜியத்தின் தலைநகர் பிறசில்சில் இருந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் விதித்த 15 நிபந்தனைகளுக்கு இணங்குவதாக இலங்கை உத்தியோகபூர்வமாக எழுத்தில் கடிதத்தை வழங்க வேண்டும் என விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு இலங்கை எந்தவிதமான பொறுப்புமிக்க பதிலையும் வழங்கத் தவறியதன் காரணமாக இந்த வரிச் சலுகை இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐரோப்பிய நாடுகளுக்கு ஆயத்த ஆடைகளை ஏற்றுமதி செய்வதற்காக இலங்கைக்கு வழங்கப்பட்ட ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளது.

இந்த வரிச் சலுகையைத் தற்காலிகமாக இரத்துச் செய்வதற்கான முடிவை முதற்கட்டமாகக் கடந்த பெப்ரவரி மாதத்தில் ஐரோப்பிய ஒன்றிய அமைச்சர்கள் எடுத்திருந்தனர்.

சர்வதேச மட்டத்திலான மூன்று மனித உரிமை நடைமுறைகளை அமுல்படுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் ஜூன் மாதத்திலிருந்து மேலும் ஆறு மாதங்களுக்கு ஐரோப்பிய கவுன்சிலின் முடிவை அமுல்படுத்துவதைப் பிற்போடுவதற்கான வாய்ப்பு ஒன்றை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியிருந்தது.

அதற்குப் பதிலாக பல முக்கிய விடயங்களில் வெளிப்படையாகத் தெரியக் கூடிய, நீடித்திருக்கக் கூடிய நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அறிவுறுத்தியிருந்தது.

எனினும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து இந்த மாதம் ஜூலை முதலாம் திகதிக்கு முன்பாக பதில் எதுவும் கிடைக்காமையினால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைத் தற்காலிகமாக இரத்துச் செய்வதற்கான தமது முடிவை பிற்போட முடியாத நிலையில் தாம் இருப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பாக அதன் வதிவிடப் பிரதிநிதியும் பிறசில்ஸ்சிற்கான தூதுவருமான றவீநாத் ஆரியசிங்க கடுமையான அறிக்கை ஒன்றை அண்மையில் விடுத்திருந்ததும் வெளிவிகார அமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பலரும் மிகக் கடுமையான தொனியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஜி.எஸ்.பி. சலுகையைக் கோருவது, ஊனம் குணமடைந்ததன் பின்னர் ஊன்றுகோலைப் பயன்படுத்துவதற்கு நிகரானது எனப் பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டத்தைத் தொடர்ச்சியாக அனுபவிக்க முடியாதென அவர் குறிப்பிட்டுள்ளார். சலுகைத் திட்டத்தை இழப்பதற்குத் தயாராக வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட காலத்தில் உதவியாக ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் கிடைக்கப் பெற்றதாகவும் இதனைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பது நியாயமற்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊனமுற்றவர்கள் பூரண குணமடைந்ததன் பின்னர் தொடர்ந்தும் ஊன்று கோல்களைக் கோருவதில் அர்த்தமில்லை எனப் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ச–5)

## சர்வதேசத்தின் தாளங்களுக்கு...

சர்வதேச சமூகத்துடனான எமது நட்பும் அமையும்.

நாம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றுக்கு ஒருபோதும் மண்டியிடமாட்டோம். எமது வரவு–செலவுத் திட்டம் இந்த இரு அமைப்புகளின் ஆலோசனைகளுக்கு அமையவே தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்கின்ற எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை வாபஸ் பெறப்படுவதால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகள் தொடர்பான தனது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலு கை ஓகஸ்ட் 15 ஆம் திகதி முதல் வாபஸ் பெறப்பட்டுள்ளதாகவும் எனினும் பேச்சுவார்த் தைக்கான கதவுகள் திறந்தேயிருப்பதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக் கப்பட்ட நிபந்தனைகளை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். நாம் அதில் தெளிவாக இருக்கின்றோம். ஜி.எஸ்.பி. பிளஸ் இழப்பு சுமார் 85 மில் லியன் யூரோ. அதேவேளை எமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நாம் ஏனைய சந்தை வாய்ப்புக்கள் குறித்தும் ஆராய்கின்றோம் என அமைச்சர் ஹெகலிய தெரிவித்துள்ளார்.(ச–5)


மாபெரும் வழிகாட்டல் கருத்தரங்கு
மாணவர்களுக்கோர் நற்செய்தி
G.C.E. A/L-2010
இறுதிப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

ஆசிரியர்:- S.மயூரன்
BBA (Hons), PGDE (MERIT) SLPS,MED(Reading)

இலங்கையின் முதல்தர வணிகக் கல்வி ஆசிரியர் S.மயூரன் அவர்கள் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் அன்னை புத்தகசாலையின் அனுசரணையில் கருத்தரங்கை நடத்தவுள்ளார்.

இடம்:- புதிய உயர் கல்விக் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
காலம்:- 12.07.2010 - 13.07.2010
காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை
இரண்டு நாள்களுக்கும் கட்டணம் 800/=,
கையேடுகளும் வழங்கப்படும்.

முக்கிய குறிப்பு:- எதிர்வரும் 10.07.2010 இற்கு முன் பதிவுகள் செய்யப்பட வேண்டும். பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
பதிவுகள் மேற்கொள்ளும் இடம்:-

அன்னை புத்தகசாலை

யாழ்ப்பாணம் 021 222 9881
சாவகச்சேரி 021 227 0003
நெல்லியடி - மொடேன் ஸ்ரோர்ஸ் - 4901519
(c-603)



நீங்கள் 16 வயதுக்கு மேற்பட்டவரா!
உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
BIT, CIMA-UK, Engineering-USA
A/L, O/L தேவையில்லை
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
e-citizen, Hardware Technology - DHT, Diploma in English, DTP - Printing,
INTERNATIONAL COMPUTER DRIVING LICENCE - ICDL, Typing, Internet & Email
Free
MCS
Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்,
324, Palaly Road, Campus Junction, Jaffna.
(c-605)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.